நமது முழுநேர ஆயருக்கான sponsor தேவைக்காகவும், மற்றும் ஆங்கிலிகன் பிரிவின் கீழ் ஆராதனை நடத்துவதற்காகவும், 2000 ஆம் ஆண்டு பரி. அந்திரேயா தேவாலயத்திற்கு (St. Andrew's Church) இடம் மாற்றப்பட்டு வியாழக்கிழமைகளில் மாலை ஆராதனை நடத்தப்பட்டது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் வார இறுதிக் கொள்கையில் செய்யப்பட்ட திருத்தங்கள் காரணமாக சபை ஆராதனை மீண்டும் வெள்ளிக்கிழமை மாலைக்கு மாற்றப்பட்டு, அதே வளாகத்தில் இன்று வரை நடந்து வருகிறது.




First Church Anniversary
03-11-1995

# இதர செயல்பாடுகள்

## பாடகர் குழு

பாடகர் குழு 1994 ஆம் ஆண்டு திரு. ஆர். ரெனால்ட் டேனியல் அவர்களால் சில அர்ப்பணிப்பு நிறைந்த சபை மக்களுடன் தொடங்கப்பட்டது. அந்த தொடக்க கால எளிமையான நிலையிலிருந்து, இக்குழு இன்று சுமார் 35 உறுப்பினர்களாக விரிவடைந்துள்ளது. ஆரம்ப காலங்களில், வாராந்திர ஆராதனையானது, கீபோர்ட், கித்தார், வயலின், மிருதங்கம், தபேலா போன்ற இசைக்கருவிகளின் இசையோடு பல துதிப் பாடல்களுடன் தொடங்கப்பட்டு நடத்தப்பட்டது. தொடக்க நாட்களிலிருந்து இந்நாள் வரை, ஆண்டவரை மகிமைப்படுத்தும்படி, பாடகர் குழுவானது ஆலய வழிபாடுகளில் ஆண்டவரைப் புகழும் அர்த்தமுள்ள, உற்சாகமான பாடல்களை பாடுவதில் முக்கிய பங்கு வகித்து வருகிறது. விசேஷமாக, பண்டிகை காலங்களிலும், கிறிஸ்மஸ் கீத ஆராதனைகளிலும் முக்கிய பங்களித்து வருகிறது. காலப்போக்கில் பல திறமையான இசைக்கலைஞர்கள் இந்த சேவையில் பங்கு பெற்றுள்ளனர். 2001-ம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் வார ஆராதனை திருச்சபை தோன்றிய நினைவு நாளோடு சேர்ந்து பாடகர் குழு நாளாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

## தலைமை பொறுப்பாளர்கள் காலவரிசை

| | |
|---|---|
| ஜூலை 1994 – மே 2002 | திரு. ஆர். ரெனால்ட் டேனியல் - பாடகர் குழுத் தலைவர் மற்றும் Church organist |
| மே 2002– ஜூலை 2008 | திரு. டி. கோயில்தாஸ் - பாடகர் குழுத் தலைவர் மற்றும் Church organist |
| ஜூலை 2008 - பிப்ரவரி 2022 | திரு. ஆர். ரெனால்ட் டேனியல் மீண்டும் பொறுப்பேற்றார்; இவருடன் ஜேன் ரிஷாந்தி, ஜெபலின் பிரின்ஸ், ஸ்நேகா ரஞ்சித், அப்ரியன் ஜெயசீலன் மற்றும் அப்னர் கிரேப்சன் ஆகியோர் Church organist - ஆக துணைபுரிந்தனர். |
| பிப்ரவரி 2022 - அக்டோபர் 2024 | திரு. ஜெபகுமார் இசை அமைப்பாளர் மற்றும் பாடகர் குழுத் தலைவராக இருந்தார்; இவருக்கு அப்ரியன் ஜெயசீலன் மற்றும் அப்னர் கிரேப்சன் ஆகியோர் Church organist - ஆக உதவினார்கள். |
| அக்டோபர் 2024 - இன்றுவரை | திரு. ரெனால்ட் டேனியல் அவர்கள் மீண்டுமாக பாடகர் குழு தலைவராக பொறுப்பேற்று நடத்துகிறார். அப்னர் கிரேப்சன் மற்றும் கொரன் கிரேப்சன் ஆகியோர் Church organ & violin வாசிப்பதில் உதவி வருகிறார்கள். |

# ஓய்வு நாள் பாடசாலை (Junior Church)

**From Sprouts to Blossoms: CSI Tamil Parish, Abu Dhabi's – "Children's Ministry"**

## Humble Beginnings

Twenty-five years ago, on April 19th, 1996, a small group of dedicated believers gathered in a member's house. The air was thick with excitement, as Mrs. Ageima Tennyson started what would become a remarkable journey of faith and spiritual learning, in the CSI Tamil Christian community, Abu Dhabi. With only a few children in attendance the little Junior church began—not with grandeur, but with Grace from above.

## Steady Growth and Small Victories

As word spread, families began sending their children to Junior church. The following year, attendance doubled. Mrs. Ageima was followed by Mrs. Jasmine Jose, and then Mrs. Helen Vijayakumar took over as Junior Church Coordinator. Soon the numbers grew to 25. More volunteers joined, lesson plans became more structured, and puppet shows, and flannel boards were added to engage the younger children. They needed a new place to meet. A room was rented in the Evangelical Center, Abu Dhabi, and transport was organized to bring the children on a weekly basis.

## Events and Occasions

Over the years, several events began to be celebrated at Junior church. A family favorite was the annual Christmas tree program. This was usually celebrated in the first week of December. Versatile teachers encouraged enthusiastic children to proclaim the birth of Christ through song, dance and drama. An integral part at every Christmas tree program was the Nativity play.

With the support of the Pastor, the Church Committee, and the parents – several initiatives and events began to take place as annual events in the Church's events calendar. Programs such as the Annual Vacation bible school (5-day program), One-day Retreats, Memory Verse competitions, Talent shows, Musical Talent evening, and Christmas Tree programs brought the CSI Tamil Parish Abu Dhabi Community together– to mention a few. Mrs. Helen Vijayakumar was followed by Mrs. Sarah Mathivanan, and then Mrs. Jebaseeli Asir took over as Junior church Coordinator. By the tenth year, the Junior church had grown to over 50 children.

### Stories of Impact

Mrs. Jebaseeli Asir was followed by Mrs. Jasmine Prince, and then the mantle of Junior Church Coordinatorship fell onto the shoulders of Mrs. Sharmily David. Over the years, the testimonies accumulated like pearls on a string:

- One child, after graduation, answered the call to lead the youth group at the local church she attends back home in India,
- Another child after graduating from Junior church, found opportunities to serve God by playing the piano during church service, back home in India.
- Still another continues to play during the church service, at St. Andrews.

Several parent testimonials received over the years, serve to further attest to Gods' Grace and continued providence. One parent shared, "We came to CSI Tamil Parish Abu Dhabi because of the Children's ministry program. The kids found faith, friends, and family, and we found a church to belong to."

### Today and Beyond

Today, the CSI Tamil Parish Abu Dhabi Junior Church welcomes over 110 children every Friday. The leading team includes trained educators, volunteers, and even tech-savvy teens, at times, who support the projector display and worship session. Classrooms are filled with laughter, music, and the buzz of learning.

Mrs. Jansi Rajkumar took over the Junior church Coordinatorship from Mrs. Sharmily David, and then Mrs. Helen Paul took over. For the past three years Dr. Mrs. Briliya Jeyaseelan has stood at the helm of the Junior Church Children's ministry, as Junior Church Coordinator.

### Conclusion

The past 25 years have been a tapestry of prayers answered, lives touched, and faith ignited. Having served in Junior Church Children's Ministry for the past 20 years, I stand testimony to the generational influence of saving Grace, and steadfast commitment of these children later in life, to Church and Missionary ministry. All Praise and Glory to our Lord Jesus Christ, for His love, His promises, and His manifold Blessings!!

**Dr. Mrs. Briliya Jeyaseelan**
Junior Church Coordinator

**ஓய்வு நாள் பாடசாலை ஒருங்கிணைப்பாளர்கள்:**

1. திருமதி. அகிமா டென்னிசன்
2. திருமதி. ஜாஸ்மின் ஜோஸ்
3. திருமதி. ஹெலன் விஜயகுமார்
4. திருமதி. சாரா மதிவானன்
5. திருமதி. ஜெபசீலி ஆசீர்
6. திருமதி. ஜாஸ்மின் பிரின்ஸ்
7. திருமதி. ஷார்மிலி டேவிட்
8. திருமதி. ஜான்சி ராஜ்குமார்
9. திருமதி. ஹெலன் ஜெயகரன் பால்
10. டாக்டர் திருமதி. ப்ரிலியா ஜெயசீலன்

## பெண்கள் ஐக்கிய சங்கம் (Womens Fellowship)

கடந்த 25 வருடங்களாக CSI Tamil திருச்சபை வழியாக ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து வழிநடத்தி வந்திருக்கிறார். குறிப்பாக, பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை தொடர்ந்து மிக சிறப்பாக நடைபெற்று வருதற்குக் கிருபை செய்த ஆண்டவருக்கு நன்றி. பெண்கள் ஐக்கிய சங்க ஊழியம் நமது திருச்சபையில் 1994 நவம்பர் 7ஆம் தேதி திருமதி. நான்சி பொன்ராஜ் மற்றும் திருமதி. ஷீபா டேனியல் ஆகியோரின் முயற்சியால் தொடங்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் கூட்டங்கள் மாதத்திற்கு ஒருமுறை பெண்கள் சங்க உறுப்பினர்களின் இல்லங்களில் நடத்தப்பட்டன. 2001ஆம் ஆண்டு முதல் ஆயர் இல்லத்தில் வைத்து தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நமது திருச்சபையின் பெண்கள் ஆன்மீக வாழ்விலும், அன்பிலும் நல்லுறவிலும் வளர்வதோடு, திருச்சபையின் ஊழியப்பணியிலும் உற்சாகமாகப் பங்குபெற்று வருகிறார்கள். 2005ஆம் ஆண்டு முதல் ஆயர் அம்மாவின் வழிகாட்டுதலில், பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை மாதத்திற்கு இரண்டு முறை (1வது மற்றும் 3வது வாரம்) நடைபெற்று வருகிறது. பெண்கள் கூடுகைகளில் திருமறை தியானம், ஜெபம், வினாடி வினாக்கள் போன்றவை நடத்தப்பட்டு, விசுவாச வாழ்வில் வளர்வதற்கு ஏதுவாக இன்று வரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முசாபா பகுதியிலுள்ள நமது திருச்சபையின் பெண்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகவும், அன்பின் ஐக்கியத்திற்காகவும் கடந்த 2014ஆம் ஆண்டு அக்டோபர் முதல் தொடர்ந்து மாதத்திற்கு ஒருமுறை (2வது வாரம்) அங்கத்தினர்களின் இல்லத்தில் வைத்து பெண்கள் கூடுகை நடைபெற்று வருகிறது. திருமதி. சோஃபியா சாலமன் கூட்ட ஏற்பாடுகளை மிக சிறப்பாக செய்து வருகிறார்கள். ஆயர் அம்மா கலந்து கொண்டு தேவ செய்தி கொடுத்து பெண்களுக்காக ஜெபித்து வருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் இரண்டாவது வாரத்தில் சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பிக்கும் வகையிலும், தங்கள் அன்பையும் ஒருமைப்பாட்டையும் தெரிவிக்கும் வண்ணமாகவும், திருச்சபையின் பெண்கள் அனைவரும் uniform saree அணிந்து, பெண்கள் தின சிறப்பு ஆராதனையை முன்னின்று நடத்தி பரிசு கொடுத்து மகிழ்ந்து, திருச்சபையில் ஆவிக்குரிய நிகழ்வுகளில் இணைந்து செயல்பட்டு வருகிறார்கள். கிறிஸ்மஸ்

காலங்களில் கிறிஸ்மஸ் மரவிழா நடத்தி இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் மகிழ்ச்சியைக் கொண்டாடி வருகிறார்கள். கிறிஸ்மஸ் செய்தி, குறு நாடகங்கள், பாடல், விளையாட்டுகள், மகிழ்ச்சியின் விருந்து, ஆகியவற்றோடு அன்பின் சூழலில் பரிசுகள் பகிரப்படுகிறது. அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகை காலத்தில் திருச்சபையோடு இணைந்து சமையல் ஏற்பாடுகளில் முன்னிலை வகிப்பதோடு, வாரம் தோறும் ஆராதனைக்குமுன் மல்லிகைப் பூக்கள் விற்பனை செய்வது, Silent Auction-க்குப் பொருட்கள் சேகரிப்பது என்று ஊழியத்தில் பெண்கள் மிகவும் உற்சாகமாக ஆயர் அம்மாவோடு இணைந்து செயல்பட்டு வருகிறார்கள். அனைத்து பெண்களையும் அன்புடன் வாழ்த்துகிறேன். அபுதாபி திருச்சபையின் கிளை சபையாகிய ருவெய்ஸ் திருச்சபையிலும் பெண்கள் விசுவாசத்தில் வளர்ந்து வருகிறார்கள். 2023ஆம் ஆண்டு ஜனவரி 20 தேதி முதல் அனைத்து வாரங்களிலும் திங்கள்கிழமை இரவு 8 மணிக்கு பெண்கள் கூடுகை Online வழியாக திருமதி. ஐடா ராபின்சன் அவர்கள் ஒழுங்கு செய்கிறார்கள். ஆயர் அம்மா தலைமையில் தேவசெய்தி, சாட்சி, ஜெப குறிப்பிற்கான ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகிறது. 4வது வாரம் திருமறையை கற்றுக் கொள்வதற்கு வசதியாக வேதாகம கேள்விகள் கேட்கப்படுகிறது. . மார்ச் மாதம் இரண்டாவது வாரம் பெண்கள் சிறப்பு ஆராதனையும் நடத்தப்பட்டு வருகின்றன. தொடர்ந்து நமது திருச்சபையின் பெண்கள் ஐக்கிய சங்கம் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து பெருக ஆண்டவர் அருள் செய்வாராக.

மீட்பரின் பணியில்

**திருமதி. ஜெபா சாமுவேல்**

ஆயரம்மா

## ஆண்கள் ஐக்கிய சங்கம் (Men's Fellowship)

ஆண்கள் குடும்பத்தை வளர்த்தெடுப்பதிலும், திருச்சபையை வழிநடத்துவதிலும், சமுதாயத்தின் வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். இந்த நோக்கத்துடன், எங்கள் CSI தமிழ் திருச்சபை, அபுதாபியில், ஆண்களின் விசுவாசம், மற்றும் சேவையை ஊக்குவிக்கும் விதமாக ஆண்கள் ஐக்கிய சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

### ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் ஆரம்பம்

ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் முதலாவது கூடுகை ஏப்ரல் 2014-இல், எங்கள் அன்பு போதகர் மறைந்த Rev.S. பால் பிரபாகர் அவர்களின் தலைமையில், ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. அந்த தொடக்கக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் திரு. ரஜ்தா தாமஸ் மற்றும் திரு. தனசிங் ராஜேஷ் ஆகியோர் ஆவார். இந்தச் சிறிய தொடக்கமே இந்தச் சேவையின் அடிப்படையாக அமைந்தது.

அதன் பின்பு, ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை மாலை ஆண்கள் ஐக்கிய சங்கக் கூட்டம் நடைபெற முடிவு செய்யப்பட்டது.

**ஆன்மிக வளர்ச்சி**

ஒவ்வொரு கூடுகையிலும், போதகர் அவர்கள் வேதாகம ஆய்வை நடத்தி, அதன் பின் ஜெப நேரம் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஜெபங்களில், எங்கள் திருச்சபை குடும்பங்களின் நலனுக்காகவும், எங்கள் தாய்நாடு இந்தியாவிற்காகவும், அபுதாபி எமிரேட்டிற்காகவும் சிறப்பு ஜெபங்கள் எறெடுக்கப்பட்டது. இவ்வாறு நடைபெற்ற சந்திப்புகள், ஆண்கள் மத்தியில் ஆன்மிக வலிமையையும், ஒன்றுபட்ட தன்மையையும், ஊக்கத்தையும் அளித்தன.

**தற்போதைய செயல்பாடுகள்**

தற்போது, ஆண்கள் ஐக்கிய சங்கம் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை மாலை 7:00 மணி முதல் 8:00 மணி வரை ஆயர் இல்லத்தில் கூடுகிறது. திருமறை ஆய்வும், ஜெபமும் இன்றும் முக்கியமாக நடைபெறுகின்றன. இதற்குப் பிறகு, சங்கத்தினர் எங்கள் திருச்சபையின் பல்வேறு செயல்பாடுகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரிக்கின்றனர். குறிப்பாக, அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகை, வாரந்தோறும் உணவு விற்பனை, ஏல விற்பனை போன்ற நிகழ்வுகளில் சங்கத்தினர் தீவிரமாக பங்கேற்கின்றனர்.

**ஆண்டு சிறப்புகள்**

ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்று ஆண்கள் சங்க சிறப்பு ஆராதனை ஆகும். இந்நாளில், திருச்சபையின் அனைத்து ஆண்களும் ஒன்றிணைந்து ஆராதனையை வழிநடத்துகின்றனர். இது, சங்கத்தின் ஆன்மிக இலக்கை வலுப்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாக விளங்குகிறது.

**நிறைவுரை**

CSI தமிழ் திருச்சபை, அபுதாபியின் ஆண்கள் ஐக்கிய சங்கம், ஜெபம், ஒன்றுபட்ட தன்மை, சேவை ஆகியவற்றின் மூலம் கடவுளின் மகிமையை வெளிப்படுத்துகிறது. 2014-ஆம் ஆண்டு தொடங்கிய இந்தச் சிறிய கூடுகை, இன்றோ திருச்சபை வாழ்வில் உறுதியான தூணாக வளர்ந்து வருகிறது. சங்கம் தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்து, கடவுளின் மகிமைக்காகவும், திருச்சபையின் ஆன்மிக வாழ்வை வலுப்படுத்தவும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது.

*எல்லா மகிமையும் கீர்த்தியும் தேவனுக்கே!*

**ஆயர் மற்றும் ஆண்கள் ஐக்கிய சங்கத்தினர்**

## சங்கிலித் தொடர் ஜெபம் (Chain Prayer)

மார்ச் 2000-ல், திருமதி ஷீபா டேனியல் அவர்களால் சங்கிலித் தொடர் ஜெபம் ஆரம்பிக்கப்பட்டது. இது நோயுற்றவர்களுக்காகவும் தேவையுடையவர்களுக்காகவும் நடத்தப்பட்டது. திருச்சபையின் அனைத்து மக்களும் ஒருங்கிணைந்து, ஒருமனப்பட்ட மனதோடு இந்த ஜெபத்தில் கலந்து கொண்டு, அதின் பலனை பெற்றனர். தேவாலயம் விரிவடைந்தபின், இந்த ஜெபம் ஜெபக்குழுவாக அபுதாபி மற்றும் முசாபா பகுதிகளில் பகுதி வாரியாக மாறியது. சங்கிலித்தொடர் ஜெபத்தின் பரிணாமமாக இன்றைய தினத்தில் ஐந்து ஜெபக்குழுக்களாக, நம் திருச்சபையின் வளர்ச்சிக்கு உதவும் தூண்களாக செயல்பட்டு வருகின்றன.

## ஜெபக் குழுக்கள்

### அல் வாதா ஜெபக்குழு

அல் வாதா ஜெபக் குழு 2011ஆம் ஆண்டில் தேவனுடைய தெய்வீக நோக்கத்தினாலும், விசுவாசமுள்ள சபை உறுப்பினர்களின் விடாமுயற்சியாலும் நிறுவப்பட்டது. தொடக்கம் முதலே உறுதியான விசுவாசத்தினால் தாங்கப்பட்டு, இக்குழு இன்று ஆன்மீக வாழ்வால் மலர்ந்த சமூகமாக வளர்ந்துள்ளது.

ஜெபக் குழுத் தலைவரின் ஊக்கமளிக்கும் தலைமைக்கீழ், உறுப்பினர்கள் வாரந்தோறும் நடைபெறும் ஜெபக் கூட்டங்களில் ஆர்வத்தோடு பங்கேற்று, மாறாத பக்தியோடு ஆண்டவரைத் தேடிச் செல்கின்றனர்.

ஒவ்வொரு செவ்வாய்கிழமையும் இரவு 8 மணியளவில் நடைபெறும் இக்கூட்டங்கள் உண்மையான ஈடுபாட்டுடன் ஜெபத்தில் வேரூன்றி நிற்கின்றன. குடும்பங்கள் ஒரே ஆவியோடு ஒன்று சேர்ந்து தேவனிடத்தில் விண்ணப்பங்களை ஏறெடுக்கின்றனர்; அவர் அருளினால் பெற்ற சாட்சிகளை பகிர்ந்து கொள்கின்றனர்; இக்குழு தங்கள் ஆன்மீக வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்களை மகிழ்ச்சியோடு சாட்சியமிடுகின்றனர்.

ஒவ்வொரு கூட்டமும் உற்சாக ஐக்கியத்துடன் நிறைவடைகிறது; அதில் பங்கேற்பவர்கள் அன்போடு உணவை பகிர்ந்து கொண்டு, ஒருவரையொருவர் ஊக்குவிக்கின்றனர். இந்த விருந்தோம்பல் ஒவ்வொரு வாரமும் ஒரு குடும்பத்தினரால் மகிழ்ச்சியுடன் நடத்தப்படுகிறது. அல் வாதா ஜெபக் குழுவின் ஆன்மீக தாக்கம், உறுப்பினர்கள் பகிரும் மனமார்ந்த சாட்சிகளிலேயே தெளிவாக வெளிப்படுகிறது. கடந்த ஆண்டுகளில், பல குடும்பங்கள் தங்கள்

விசுவாசம் வலுப்பெற்ற விதங்களையும், வாழ்வில் மாற்றங்களை உருவாக்கிய விதங்களையும் சாட்சியமாய் தெரிவித்துள்ளனர்.

இதன் கூடுகைகளின் மூலம் ஏராளமான அற்புதங்களை அவர்கள் தங்கள் வாழ்க்கையில் கண்டுள்ளனர்—குடும்பங்கள் மகிழ்ச்சியுடன் மீண்டும் ஒன்றிணைக்கப்பட்டனர்; சிலர் புதிய வேலை வாய்ப்புகளையும் எதிர்பாராத பதவி உயர்வுகளையும் பெற்றனர்; பலர் சாலை விபத்துக்களில் இருந்து தேவனுடைய அருளால் காத்துக்கொள்ளப்பட்டனர். உடல், மனம் மற்றும் ஆன்மீக குணமளிப்புகள் பலரின் இதயங்களை ஆழமாகத் தொட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக, இவையனைத்தும் உறுப்பினர்களை தேவனோடு இன்னும் ஆழமான உறவில் இணைத்தன. இது ஜெபத்தின் வல்லமையையும், ஒன்றுபட்ட விசுவாசக் குழுவின் பலத்தையும் வெளிப்படுத்துகிறது.

அல் வாதா ஜெபக் குழு, ஒன்றுபட்ட விசுவாசமும், ஈடுபாட்டுடன் கூடிய ஜெபமும், ஆன்மீக ஒற்றுமையும் எவ்வளவு வல்லமையுடையது என்பதை வெளிப்படுத்தும் ஒளிமிக்க சாட்சியாக நிற்கிறது. 2011ஆம் ஆண்டு எளிய தொடக்கமாக ஆரம்பித்த இக்குழு, இன்று கிருபையின் ஆலயமாக மலர்ந்து—வாழ்வுகள் புதுப்பிக்கப்படுகின்றன, ஜெபங்கள் பதிலளிக்கப்படுகின்றன, விசுவாசத்தால் பிணைப்புகள் வலுப்பெறுகின்றன. வாரம் தோறும், உறுப்பினர்கள் உறுதியான விசுவாசத்தோடு ஜெபிப்பதற்கு கூடி வருகின்றனர். இச்சாட்சிகள் தேவனுடைய நன்மையை ஒலிக்கச் செய்கின்றன; குடும்பங்கள் விசுவாசத்தில் நாளுக்குநாள் வலுப்பெறுகின்றன. இவ்வாறு, அல் வாதா ஜெபக் குழு தன் சமூகத்தின் இதயத்தில் நம்பிக்கையும், குணமளிப்பும், தெய்வீக நோக்கமும் நிறைந்த ஒளிக்கோபுரமாகத் திகழ்கிறது.

**திரு. கிரேப்சன்**

## ஹம்தான் ஜெபக்குழு

எங்கள் ஆண்டவராகிய சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பெரும் ஆசீர்வாதத்தினால், அபுதாபி CSI தமிழ் ஆலயத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட ஹம்தான் ஜெபக்குழு பற்றி மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

2012–2014 ஆண்டு நிர்வாகக் குழுவின் காலத்தில், அருட்திரு. பால் பிரபாகர் அவர்களின் ஆலோசனையினால் இந்த ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டது. முதலில், ஹம்தான், டூரிஸ்ட் கிளப் பகுதி, அல் வாதா, முரூர் மற்றும் முசாபா என்ற ஐந்து பகுதிகளில் ஜெபக்குழுக்கள் ஏற்பாடுசெய்யப்பட்டன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

ஆரம்ப காலங்களில், எங்கள் அன்பிற்குரிய மறைந்த அருட்திரு. பால் பிரபாகர் அவர்கள் ஹம்தான் ஜெபக்குழுவில் இணைந்து இருந்தார். முதல் ஜெபக்குழு, ஹம்தான் சென்டருக்கு பின்புறம் உள்ள Mr. Shoe கட்டிடம், Flat 303-ல் அமைந்திருந்த பார்சனேஜில் நடைபெற்றது. அபுதாபி CSI தமிழ் ஆலயத்தின் நிறுவனர் உறுப்பினர்களான திரு. ஜாண் கிறிஸ்டோபர் மற்றும் திரு. ஜி. ராஜ்குமார் அவர்கள் இந்த ஜெபக் கூட்டத்தில் முக்கிய பங்காற்றினர்.

சிறிய எண்ணிக்கையிலான விசுவாசிகளுடன் ஆரம்பித்த இந்த ஜெபக்குழு, ஆண்டவரின் அருளால் தொடர்ந்து வளர்ந்து வந்தது. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இடையறாது, கொரோனோ தொற்று காலங்களிலும் கூட ஜெபம் நடத்தப்பட்டது. இன்று, சபைக்கும், ஊழியங்களுக்கும், உலக நாடுகளுக்கும் இடையறாது ஜெபிக்கும் பல ஜெப வீரர்களுடன் இந்த ஜெபக்குழு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஹம்தான் ஜெபக்குழு எப்போதும் CSI தமிழ் ஆலயத்தின் நிர்வாகப் பணிகளில் பங்கேற்று வருகிறது. பல உறுப்பினர்கள் செயலாளர்கள், பொருளாளர்கள், வார்டன்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக சேவையாற்றியுள்ளனர். சிறந்த பாடகர் குழு தலைவர், Organist, பாடகர் குழு உறுப்பினர், ஜெபம் மற்றும் ஊழிய வாஞ்சை உள்ள உறுப்பினர்கள் ஹம்தான் ஜெபக்குழுவிலிருந்து எழுந்துள்ளனர்.

2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்று வரை ஒருங்கிணைப்பாளராக இந்த ஜெபக்குழுவுடன் இணைந்து பணியாற்றுவதில் நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவன்.
எல்லா மகிமையும் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கே!

கிறிஸ்துவில்,

**திரு. சாமுவேல் பாஸ்கர். W**

## முரூர் ஜெபக்குழு

### விசுவாசத்தில் ஒருங்கிணைந்து வளருவோம்

முரூர் ஜெப ஐக்கியமானது, 2012 ஆம் ஆண்டு திரு. மில்டன் மற்றும் திரு. தனசிங் ராஜேஷ் ஆகியோரின் வீடுகளில் சிறு ஜெபக்குழுவாக சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப நாட்களில் நான்கு அல்லது ஐந்து குடும்பங்களுடன் தொடங்கப்பட்ட இந்த ஐக்கியம் இன்று ஒரு துடிப்பான ஆவிக்குரிய ஐக்கியமாக வளர்ந்துள்ளது. நம் திருச்சபையின் ஜெப ஊழியங்கள் விரிவுபடுத்தப்பட்டபோது இந்த முரூர் ஜெபக்குழு தனிப்பட்ட ஜெபக்குழுவாக செயல்பட ஆரம்பித்தது. இது முரூர் பகுதியில் உள்ள குடும்பங்களை ஜெபத்திலும் ஐக்கியத்திலும் அன்புடன் அரவணைத்தது.

திரு. பிரின்ஸ் ஜீவானந்தம் அவர்களுடைய சீரிய தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஜெபக்குழு திரு. ரஞ்சித் குமார் ஜேக்கப் மற்றும் திரு. ஜோகன்ஸ்பர் அவர்களால் வழிநடத்தப்பட்டு தற்போது திருமதி. பிரியா ரஞ்சித் அவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது சுமார் 15 குடும்பங்கள் ஒன்று கூடுகின்றனர். இவர்கள் ஜெபத்திற்கு மாத்திரமல்ல குடும்ப ஐக்கியத்திற்காகவும், பாரங்களைப் பகிர்ந்து கொள்ளவும், மகிழ்ச்சியைக் கொண்டாடவும், மற்றும் தேவனை அறிகிற அறிவில் வளரவும் கூடி வருகிறார்கள்.

காலம் செல்லச் செல்ல இந்த ஜெப ஐக்கியத்தின் உறுப்பினர்கள் ஒரு பெரிய குடும்பமாக மாறிவிட்டனர். கடினமான சூழ்நிலைகள், வியாதிகள், மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகள் போன்ற தருணங்களில் அவர்கள் ஜெபத்தில் ஒருவருக்கொருவர் துணையாக நிற்கின்றனர். மகிழ்ச்சியான தருணங்களிலும் ஒன்று கூடி மகிழ்கிறார்கள். "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து அப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" என்று கலாத்தியர் 6:2-ல் சொல்லப்பட்ட வசனமே முரூர் ஐக்கியத்தின் உயிர்மூச்சு ஆகும்.

இந்த ஐக்கியம், திருச்சபை ஊழியங்கள், விற்பனை விழாக்கள், மற்றும் உபவாச கூட்டங்கள் ஆகிய சபை நிகழ்ச்சிகளில் முழு உற்சாகத்தோடு பங்கேற்கிறது. இது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் வளர்ச்சியின் மீதுள்ள ஆழமான அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. மேலும் இவர்கள் ஜெபம், அந்நியோநியம், அன்பு ஆகியவற்றில் நிலைத்திருந்து, அப்போஸ்தலர் 2:42-ம் வசனத்தை பிரதிபலிக்கிறவர்களாக, ஒருமனதோடு விசுவாசத்தில் உறுதியாயிருந்து, தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

கர்த்தரின் சேவையில்

**திருமதி. பிரியா ரஞ்சித்**

## முசாபா ஜெபக்குழு

முசாபா பகுதிவாழ் சபை மக்கள் ஒன்றிணைந்து ஜெபிக்கவும், ஐக்கியத்தில் பலப்பட்டு வளரும்படி ஊக்குவிக்கும் நோக்கத்துடனும், 2012 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி, திரு. ஜாண் தாமஸ் இல்லத்தில் 'முசாபா ஜெபக்குழு' ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை தோறும் மாலை 8 மணி முதல் 9 மணி வரை நடைபெறும் ஜெப ஐக்கியங்களில் சபைக்காகவும், சபை வளர்ச்சிக்காகவும், ஊழியங்களுக்காகவும், நற்செய்தி பணியாளர்களுக்காகவும், குடும்பங்களுக்காகவும், தேசங்களுக்காகவும் மற்றும் பல தனிப்பட்ட தேவைகளுக்காகவும் ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகின்றன, இக்கூடுகைகளில் சிறுவர்களும் பல்வேறு ஜெபக் குறிப்புகளுக்காக ஜெபிக்கும்படி ஊக்குவிக்கப்படுகின்றனர். இந்த ஐக்கியம் அநேகர் ஜெபத்திலும், தேவனோடு உள்ள ஐக்கியத்திலும் வளர்வதற்கும், உறுதிப்படுவதற்கும் உதவியாக உள்ளது.

கோவிட்-19 காலங்களில் இல்லங்கள் தோறும் கூடி ஜெபிக்க முடியாமல் போனாலும், இணையத்தளத்தில் 'ஜூம்' செயலி(zoom meeting) வழியாக ஜெபங்கள் தடையில்லாமல் தொடர்ந்து நடைபெற கர்த்தர் உதவி செய்தார்.

முதலில் முசாபா பகுதி குடும்பங்களை கொண்டு துவங்கப்பட்டாலும் நாளடைவில் பிற சுற்றியுள்ள பகுதிகளான பனியாஸ், ஷக்பூத் சிட்டி, அல் ரீஃப் பகுதி அங்கத்தினர்களும் உள்ளடக்கப்பட்டு தற்போது 30-க்கும் மேற்பட்ட குடும்பங்களை கொண்டுள்ளது.

ஜெபக்கூடுகைகள் மாத்திரமல்லாமல் அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகை காலங்களில் குழுவாக இணைந்து உணவு தயாரிப்பு மற்றும் விற்பனைகளில் ஈடுபடவும், உபவாச ஜெபங்களில் குழுவாக ஆராதனைப் பாடல்களை பாடி ஆண்டவர் நாமத்தை மகிமைப்படுத்தவும் கர்த்தர் கிருபை பாராட்டி வருகிறார்.

**திரு. சாலமன் சுசீந்தர்**

## டூரிஸ்ட் கிளப் [TCA] ஜெபக்குழு

**TCA** ஜெபக் குழு மார்ச் 27, 2012 அன்று திரு. தியோடர் அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற முதல் ஜெபக் கூட்டத்துடன் தொடங்கப்பட்டது. தேவனுடைய கிருபையால் இக்கூட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தொடக்கம் முதல், நவம்பர் 20, 2012 வரை திருமதி. ஷர்மிளா ராஜேஷ் அவர்கள் ஜெபக் குழுவை வழிநடத்தினார். பின்னர், திரு. தனசிங் ராஜேஷ் அவர்கள் பொறுப்பை ஏற்று குழுவை பலப்படுத்தி வழிநடத்தினார். மே 14, 2020 அன்று திரு. டேவிட் பால் ராஜ் அவர்கள் தலைமையினை ஏற்று, இன்றுவரை அர்ப்பணிப்புடனும் விசுவாசத்துடனும் குழுவை நடத்தி வருகிறார்.

தொடக்கத்தில், அபுதாபி TCA பகுதியில் சில குடும்பங்களும் சில இளைஞர்களும் இணைந்து ஜெபக் குழுவை ஆரம்பித்தனர். பின்னர், விசுவாசத்திலும், ஜெபத்திலும், அன்பிலும் வளர்ச்சி கண்டது. கொரோனா தொற்றுநோயின் காலத்திலும், Zoom வழியாக விசுவாசத்தோடு கூட்டம் தொடர்ந்து நடந்தது. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இரவு 8.00 முதல் 9.00 மணி வரை, TCA குடும்பம் தேசத்திற்காகவும், சபைகளுக்காகவும், குடும்பங்களுக்காகவும், விசேஷத் தேவைகளுக்காகவும் ஜெபிக்க ஒன்று கூடுகிறது. இன்று, சுமார் 20 குடும்பங்களும் 10 இளைஞர்களும் ஆவலுடன் பங்கேற்று வருகின்றனர். தேவன் இந்த ஜெபக் குழுவிற்கு பாடல், ஆராதனை, பிரசங்கம், இசைக்கருவிகள் மீட்டுதல் போன்ற பல்வேறு திறமைகளை அருளியிருக்கிறார். ஒவ்வொரு வாரமும் குடும்ப சாட்சிகள் பகிரப்பட்டு, விசுவாசத்தில் ஒருவருக்கொருவர் பலப்படுத்தப்படுகின்றனர். வெளிநாட்டிற்கோ அல்லது பிற எமிரேட்ஸ்களுக்கோ இடம்பெயர்ந்தவர்களும் WhatsApp குழுவின் மூலம் தொடர்ந்து இணைந்து, இந்த ஜெபக் குழுவிற்கு ஆதரவு அளித்து வருகின்றனர்.

ஜெபக் குழு உறுப்பினர்கள் அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகை, உபவாச ஜெபக் கூட்டங்கள் போன்ற சபை நிகழ்வுகளில் பங்கு கொள்கின்றனர். மேலும், தேவையோடு இருப்பவரை சந்தித்து, உதவி செய்து, ஜெபத்தில் துணை நிற்கின்றனர்.

**TCA ஜெபக் குழுவின் சிறுவர்கள்**

தேவன் இந்த ஜெபக் குழுவிற்கு 15-க்கும் மேற்பட்ட சிறு பிள்ளைகளை அருளியிருக்கிறார். அவர்கள் சபையின் எதிர்கால தூண்களாகக் கருதப்படுகிறார்கள். அவர்களை தேவனுடைய வார்த்தையில் வளர்க்க, ஜெபக் கூட்டங்களில் சிறப்பு செயல்பாடுகள் நடத்தப்படுகின்றன. அர்ப்பணிப்புடன் செயல்படும் பெற்றோர்கள் அவர்களை ஊக்குவிக்கின்றனர். பிள்ளைகளும் பாடல்கள், இசை, வேதாகம வாசிப்பு, ஜெபம் ஆகியவற்றில் பங்கேற்று, ஜெபக் குழுவை முன்னோடியாக நடத்தி, தேவனை மகிமைப்படுத்துகிறார்கள்.

**முன்னேற்றத்தின் ஆண்டு – 2025**

2024 ஆம் ஆண்டு இறுதி ஜெபக் கூட்டத்தில், குடும்பங்கள் தேவனுடைய விசுவாசத்தைக் குறித்து மனமார்ந்த சாட்சிகளைப் பகிர்ந்தனர். நமது சபையின் 25ஆம் ஆண்டு விழாவுடன் இணைந்து, ஜெபக் குழு "முன்னேற்றத்தின் ஆண்டு" என்ற 2025ஆம் ஆண்டின் தலைப்பை ஏற்றுக் கொண்டது. இது ஆவிக்குரிய வளர்ச்சியை ஆழப்படுத்தவும், ஏழைகளுக்குச் சேவை செய்யவும், குடும்ப நலனில் அதிக கவனம் செலுத்தவும் அர்ப்பணிக்கப்பட்டது.

இந்த தரிசனத்தோடு, TCA ஜெபக் குழு "முன்னேற்றத்தின் ஆண்டு" என்ற குறிக்கோளை ஏற்றுக் கொண்டு, தேவனோடு நெருக்கமாக நடக்கவும், அன்பை பிறருக்கு பகிரவும், குடும்ப வாழ்வை பலப்படுத்தவும் உறுதியடைந்துள்ளது. இந்த ஆவிக்குரிய மைல்கல்லை நினைவுகூரவும், தேவனை மகிமைப்படுத்தவும், TCA ஜெபக் குழு சிறப்புப் பாடலையும் இயற்றியுள்ளது.

**திரு. டேவிட் பால் ராஜ்**

## முசாபா வேத ஆராய்ச்சி மற்றும் சுவிசேஷ ஊழிய வரலாறு

முசாபா முகாம் ஊழியம் 1995ஆம் ஆண்டில் திரு. அண்ணாதுரை அவர்களின் மூலம் சில சகோதரர்களின் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்டது. அதன் மூலம் அநேக சகோதரர்கள் ஆலய ஆராதனையில் வாரந்தோறும் கலந்து கொள்ள ஆரம்பித்தனர். வேத ஆராய்ச்சி மற்றும் சுவிசேஷ ஊழியம் 2000 ஆம் ஆண்டு முதல் கடவுளின் விசுவாசத்திற்கு சாட்சியாக இருந்து வருகிறது, இந்த ஊழியம், பிரார்த்தனை மற்றும் ஆன்மீக வளர்ச்சியில் வேரூன்றி உள்ளது. இந்த கூடுகை மாதத்திற்கு ஒரு முறை சந்தித்தது. மேலும் லெந்து நாட்களில் கூட்டம் வாரந்தோறும் நடைபெற்றது. வேத ஆராய்ச்சி குருவானவரால் வழிநடத்தப்பட்டன, மேலும் திருச்சபை, சிறப்பு செய்தியாளர்களை பிரசங்கிக்க

அழைத்த போதெல்லாம், அவர்கள் முசாபா பிரார்த்தனை கூட்டுறவிலும் ஊழியம் செய்தனர். இது ஒரு சில குடும்பங்கள் மற்றும் சகோதரர்களைக் கொண்ட ஒரு சிறிய கூட்டமாக தொடங்கியது. வாகனம் வைத்திருந்த உறுப்பினர்கள் அன்புடன் மற்றவர்களுக்கு போக்குவரத்தை வழங்கினர். கிறிஸ்தவ சேவையின் உணர்வை உருவகப்படுத்த தங்கள் நேரத்தையும் சக்தியையும் செலவிட்டனர். ஆரம்பத்தில் சகோதரர்களின் தங்குமிடம் தற்போதுள்ள மஸியாத் மாலுக்கு எதிரே உள்ள முசாபாவில் இருந்தது. அங்கிருந்து சுவிசேஷ ஊழியம் தொடங்கி முசாபா தொழில்துறை பகுதி மற்றும் ICAD வரை விரிவுபடுத்தப்பட்டது.

அருட்திரு. இர்வின் சார்லஸ் மற்றும் காரியக் குழுவின் பிரார்த்தனையின் மூலம், திரு.சுரேஷ் பிச்சைமணி வீட்டில் வேத ஆராய்ச்சி தொடங்கியது. பின்னர் திரு. விஜய் ஆனந்தின் வீட்டில் நடத்தப்பட்டது, 2016 ஆம் ஆண்டு வரை, சுமார் 40 முதல் 50 பேர் இந்த வேத ஆராய்ச்சியில் பங்கேற்றனர். பங்கு பெறுபவரின் எண்ணிக்கை அதிகமானதால், இந்த வேத ஆராய்ச்சி கூடுகை மார்த்தோமா தேவாலய மண்டபத்திற்கு மாற்றப்பட்டு, மேலும் விரிவுபடுத்தப்பட்டது. பல ஆண்டுகளாக வளர்ந்த இந்த முசாபா வேத ஆராய்ச்சி கூடுகை, கடவுளின் அசைக்க முடியாத விசுவாசத்திற்கு ஒரு உயிருள்ள சாட்சியாக நிற்கிறது. வீடுகளில் ஒரு தாழ்மையான கூட்டமாக தொடங்கிய கூடுகை, அதன் ஆரம்ப எல்லைகளைத் தாண்டி ஒரு துடிப்பான ஊழியமாக மலர்ந்தது.

ஆரம்பத்தில், முசாபா முகாம்களில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊழியம், பின்னர், திரு. மஹேர் மற்றும் குழுவினரால் விரிவாக்கப்பட்டு, ருவெய்ஸ் மற்றும் மதினா சாயத் பகுதிகளையும் உள்ளடக்கிய ஊழியமாக வளர்ந்தது.

ஒவ்வொரு வாரமும் மொத்தமாக 12 அல்லது 13 'Mission Drive' குழுக்கள் மூலமாக தன்னார்வத் தொண்டர்கள் அபுதாபி எமிரேட்டின் நகரங்களுக்கு தவறாது சென்றனர்.

மூன்று 'Mission Drive' குழுக்கள் லீவா பகுதியிலும், மூன்று 'Mission Drive' குழுக்கள் மதினா சாயத் பகுதியிலும், ஒரு 'Mission Drive' குழு சீலாவிலும், ஒரு 'Mission Drive' குழு மிர்பாவிலும், இரண்டு 'Mission Drive' குழுக்கள் கிழக்கு பகுதியிலும் வாரந்தோறும் ஊழியம் செய்தனர். அபுதாபியின் துணை நகர்ப்புறங்களிலும் சிலர் ஊழியம் செய்யும் வாய்ப்பு பெற்றனர். குடும்பமாக, தனிப்பட்டவர்களாக பலர் இவ்வூழியத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். தற்சமயம் 12 குடும்பங்களும், 25 சகோதரர்களும் இவ்வூழியத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உண்மையில், இந்த பயணம் நமது ஆன்மீக அடித்தளத்தை வலுப்படுத்தியுள்ளது, சேவைக்கு நம்மை தயார்படுத்தியுள்ளது, மேலும் அவரது பெயரில் இரண்டு அல்லது மூன்று பேர் எங்கு கூடினாலும், அவர் உண்மையிலேயே நம்மிடையே இருக்கிறார் என்பதை நினைவூட்டியுள்ளது. இந்த ஊழியத்தின் மூலம் அவர் செய்த மற்றும் தொடர்ந்து செய்து வரும் மகத்தான காரியங்களுக்கு கடவுளுக்கே மகிமை உரித்தாகுக!

## ருவெய்ஸ் திருச்சபை

அபுதாபி சபையின் ஆரம்ப காலமான 2002 ஆண்டு காலங்களில் ருவெய்ஸ் பகுதியில் வசித்து வந்த திரு. டேவிட் ரவிக்குமார் அவர்கள் இல்லத்தில் வைத்து அருட்திரு. ஜாண் இர்வின் சார்லஸ் அவர்கள் மூலமாக மாதம் ஒருமுறை திருவிருந்து ஆராதனை நடைபெற்று வந்தது.

2015ம் ஆண்டு outreach சகோதரர்கள் மூலம் ருவெய்ஸிலிருந்து கயாத்தி செல்லும் வழியிலுள்ள All Season என்னும் கேம்ப் பகுதியில் வைத்து சுமார் 4 உறுப்பினர்களுடன் எல்லா வாரமும் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரத்தில் கூடுகை துவங்கப்பட்டது. பின்னர் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகரித்ததினால் அபுதாபி சபைகமிட்டி அங்கத்தினர்களின் ஆதரவோடு எல்லா வாரமும் வெள்ளிக்கிழமை மாலை சபை போதகர் அருள்திரு. ஜாண் பிரைட் அவர்கள் தேவசெய்தி அளித்து திருவிருந்து ஆராதனையை நடத்தி தந்தார்கள்.

2016ம் ஆண்டு ஆல் சீசன் கேம்ப் நிர்வாக மாற்றம் ஏற்பட்டதால் பெ.ஃரோபான் என்னும் கேம்பில் இடம் தேர்வு செய்து ஆராதனை நடைபெற்றது. பின்னர் பெ.ஃரோபான் கேம்ப் நிர்வாக மாற்றம் ஏற்பட்டதால் அங்கிருந்து மாற்றப்பட்டு சுமார் 6 மாத காலம் ராயல் கேம்ப் அருகில் உள்ள அல் வசித்தா கேம்பில் வைத்து எல்லா வாரம் வெள்ளிக்கிழமை மாலை நேரத்தில் ஆராதனை நடைபெற்றது.

அதன் பின்னர் அங்கிருந்து இடம் மாற்றப்பட்டு ருவெய்ஸ் பகுதியில் உள்ள ADNOC TENT-ல் வைத்து ஆராதனை நடைபெற்றது, சபை போதகர் அருள்திரு. ஜேம்ஸ் பால் அவர்கள் தேவசெய்தி அளித்து திருவிருந்து ஆராதனையை நடத்தி தந்தார்கள்.

கொரோனா காலங்களில் zoom meeting மூலமாக ஆராதனை நடத்தப்பட்டது. சபை மக்களின் ஜெப விண்ணப்பத்தின் படி கடந்த 2022 வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் St.John Baptist சபையின் அனுமதியுடன் எல்லா வாரமும் சனிக்கிழமை மாலை 7 மணி முதல் 7:15 வரை மிஷனரி சங்கம் - AIMS Alter Prayer-ம், 7:15 மணி முதல் 7:30 மணி வரை துதிப்பாடல் ஆராதனையும், 7:30 மணிக்கு சபை ஆராதனையும் சிறப்பாக நடைபெற்று வந்தது. சபை போதகர் அருள்திரு. ஜெரி ராஜ்குமார் அவர்கள் தேவசெய்தி அளித்து ஆராதனையை நடத்தி தந்தார்கள்.

2023 ஆண்டு ஜுன் மாதம் முதல் நமது சபை போதகர் அருள்திரு. Dr. சாமுவேல் அவர்கள் தேவசெய்தி அளித்து ஆராதனையை நடத்தி வருகிறார்கள். சபை போதகர் வர இயலாத நாட்களில் அருள்திரு. அதோனி மனுவேல் அவர்களும் சபை ஆராதனையை தடையின்றி சிறப்பாக நடத்தி தருகின்றார்கள்.

Junior Chruch, உபாவாச கூடுகை மற்றும் பெண்கள் ஐக்கிய சங்கம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. Junior Chruch சிறுவர்களுக்கு வேதாகம அறிவு கேள்வித்தாள்கள் தயாரிக்கப்பட்டு அனைவருக்கும் எல்லா மாத துவக்கத்தில் கொடுக்கப்பட்டு மாத இறுதியில் விடைத்தாள் திருத்தப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

சபை வளர்ச்சிக்காக பாடுபட்ட outreach அங்கத்தினர்கள், சபை போதகர்கள், சபை கமிட்டி அங்கத்தினர்களை நினைவு கூறுகிறோம். குறிப்பாக நமது சபை போதகர், சபை கமிட்டி அங்கத்தினர்கள் அனைவரும் நல்ல ஆலோசனைகளை வழங்கி இங்கு நடைபெறும் அனைத்து சிறப்பு நிகழ்வுகளிலும் பங்குபெற்று திறன்பட செயல்பட்டு வருகின்றார்கள்.

ஆலய ஆராதனையில் சுமார் 30 உறுப்பினர்கள் கலந்து கொள்கிறார்கள், பின்வரும் காலங்களில் இன்னும் அதிகமான உறுப்பினர்கள் சபை அங்கத்தினர்களாக இணைந்து தனி திருச்சபையாக உருவாக இறைவனிடம் வேண்டிக்கொள்வோம். நன்றி.

## மதினா சாயத் திருச்சபை

கர்த்தருடைய கிருபையும், சமாதானமும் நிரம்பிய அபுதாபி தமிழ் CSI திருச்சபைக்கு, 25ஆம் ஆண்டு விழா வாழ்த்துக்களை, Madinat Zayed கிளை சபை தெரிவித்துக் கொள்கிறது.

இந்த நல்ல தருணத்தில் Madinat Zayed கிளை சபையின் வரலாற்றை சுருக்கமாக இங்கு பகிர்ந்துள்ளோம்.

06 ஜுன் 2014 முதல் அபுதாபி தமிழ் CSI திருச்சபையின் சில Outreach Volunteers, Madinat Zayed பகுதிக்குச் சென்று அங்குள்ள ஆத்துமாக்களை சந்திக்க ஆரம்பித்தனர். இந்த ஊழியத்தின் மூலமாக Madinat Zayed-ன் பல பகுதிகளுக்கு சுவிசேஷம் சென்றடைந்தது. அப்போஸ்தலர் 6:7 - “தேவனுடைய வார்த்தை வளர்ந்து பெருகிற்று...” என்ற வசனத்தின் படி, கர்த்தருடைய கிருபையால், Madinat Zayed பகுதியில், 20 செப்டம்பர் 2019 அன்று Rev. James Paul அவர்களின் தலைமையில், முதல் ஆராதனை நடைபெற்றது.

அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகை, சபை நாள், கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள், கன்வென்ஷன் கூட்டம், weekly prayer cell ஆகிய நிகழ்வுகள் Madinat Zayed கிளை சபையிலும் நடை பெற கர்த்தர் கிருபை செய்கிறார்.

இக்கிளை சபையின் வழியாக பல ஆத்துமாக்கள் கர்த்தருடைய வார்த்தையில் வளர்ந்து வருகின்றனர்.

இதற்கு ஆதரவாக இருக்கும் அபுதாபி தமிழ் CSI திருச்சபையின் போதகர்கள், செயற்குழு அங்கத்தினர்கள் மற்றும் சபை அங்கத்தினர்களுக்கு Madinat Zayed சபை சார்பாக நன்றிகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## நற்செய்தி பணியாளர்கள் மாதம் [AIMS]

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் மாதம் நற்செய்தி பணியாளர்கள் மாதமாக மிஷனரி மற்றும் மிஷனரி அமைப்புகளை ஆதரிக்கும் வகையில் அனுசரிக்கப்பட்டு வந்தது. கோவிட் காலங்களில் ஏற்பட்ட சில மாற்றங்களினால், தற்போது நற்செய்தி பணியாளர்கள் மாதம் ஏப்ரல் அல்லது மே மாதங்களில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மூன்று வருடங்களுக்கு முன்னால் AIMS என்று பெயர் சூட்டப்பட்டு இன்னும் பல புதுமையான முயற்சிகளுடன் இந்தப் பணி நமது சபையால் சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

**நற்செய்தி பணியாளர்கள் மாத நிகழ்வுகள்:**

கர்த்தரின் கிருபையால் பின்வரும் நிகழ்வுகள் AIMS மூலம் நடத்தப்பட்டன.

- ஒவ்வொரு வாரமும் திருச்சபை ஆராதனைக்குப் பிறகு மிஷனரிகளுக்கு உதவும் வகையில் சிற்றுண்டி மற்றும் தேநீர் கடை
- அபுதாபி, மதினா சாயத், ருவெய்ஸ் பகுதிகளில் பார்பிக்யூ நிகழ்ச்சிகள்
- பனியாஸ் விளையாட்டு மற்றும் கலாசார மையத்தில் விளையாட்டு மற்றும் food festival.
- மிஷனரிகளைப் பற்றிய அறிவை ஊக்குவிக்க அனைத்து வயதினருக்குமான மிஷனரி வாழ்க்கை வரலாற்றுப் போட்டி.
- AIMS Altar Prayer 2023 மே 26 முதல் ஆரம்பிக்கப்பட்டது; ஒவ்வொரு வாரமும் மிஷனரிகளுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படுகிறது. ஜெபக் குறிப்புகள் AIMS தன்னார்வலர்களால் பகிரப்படுகின்றன.
- AIMS Young Talent – குழந்தைகள் தங்கள் கைவேலை / படம் / உணவு பண்டங்களை காணிக்கையாகக் கொண்டு வர ஊக்குவிக்கப்பட்டனர்.
- AIMS ஈஸ்டர் விருந்து
- AIMS-e-KADAI – இறக்குமதி செய்யப்பட்ட சிற்றுண்டிகள், வீட்டில் தயாரிக்கப்பட்ட

உணவு பண்டங்கள், வெள்ளிக்கிழமை இரவில் உணவுகள், கைவினைப் பொருட்கள், செடிகள், மலர் மற்றும் புத்தகங்கள் போன்றவை விற்பனை செய்யப்பட்டன.

- அனைத்து வயதினருக்கும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியாக AIMS Carpenter Training

Dr.ஆஷிபா ஈபன், திரு. ரமேஷ், திரு. பிஷோ ஆகியோர் இந்த நற்செய்தி பணியாளர்கள் மாத நிகழ்ச்சிகளை நிர்வாகக் குழு உறுப்பினர்களோடு சேர்ந்து பொறுப்பேற்று நடத்தி வருகிறார்கள்.

## இரத்த தான முகாம்

நம் திருச்சபையின் உறுப்பினர்களான திரு. தனசிங் தனசிங் ராஜேஷ் மற்றும் திரு. மஹேர் ஆகியோரின் முயற்சியினால் 2013-முதல் 2020 வரை [கோவிட் தொற்று நோய்க்கு முன்பு வரை] இரத்த தானம் முகாம் நடத்தப்பட்டது. Khalidia Blood bank-ன் அங்கீகாரத்துடன் இது அநேக நோயாளிகளுக்கு உதவியளிக்கும் வகையில் தபசு காலங்களில், மாலை நேரம் 6.30 முதல் 9.30 மணி வரை நடத்தப்பட்டது. ஒன்பது படுக்கைகள் கொண்ட இந்த முகாமில் ஏறக்குறைய முசாபா உறுப்பினர்கள் உட்பட 30 திருச்சபை மக்கள் இந்த முகாமில் உற்சாகமாகக் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர். திருமதி. ஷர்மிளா ராஜேஷ் அவர்கள் அதில் இரத்ததானம் கொடுப்பவர்களுக்கு தேவையான மருத்தவ கண்காணிப்பை பொறுப்பெடுத்துக் கொண்டார்கள்.




## மருத்துவ மிஷன் சிறப்பு ஆராதனை

2017ஆம் ஆண்டிலிருந்து, பிப்ரவரி மாத இரண்டாவது வியாழக்கிழமை (தற்போது வெள்ளிக்கிழமை) மருத்துவ மிஷன் ஆராதனை நமது தேவாலயத்தில் நடத்தப்படுகிறது. கடந்த 9 ஆண்டுகளாக, மருத்துவர்கள், செவிலியர்கள், துணை மருத்துவ பணியாளர்கள் மற்றும் நிர்வாக பணியாளர்கள் அனைவரும் இந்த ஆராதனையில் பங்கேற்று, ஆராதனையை வழிநடத்தியும், குழுப் பாடலால் தேவனை மகிமைப்படுத்தியும் வருகின்றனர். மேலும், குருவானவர் அவர்கள், மருத்துவ

பணியாளர்கள் மனித குலத்திற்கு தன்னலமின்றி தொடர்ந்து சேவை செய்யத் தொடர்ந்து மறு அர்ப்பணிப்பு செய்து பிரார்த்திப்பார்கள்.

நமது தேவாலய மருத்துவ பணியாளர்கள் அபுதாபி முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றி வருகின்றனர். தேவாலய உறுப்பினர்கள் மற்றும் பிறர் எப்போது வேண்டுமானாலும் அணுகும்போது அவர்கள் உடனடியாக உதவத் தயாராக இருக்கின்றனர்.

நமது தேவாலய மருத்துவ சங்கத்தின் தரிசனம் என்னவெனில்: “ஆரோக்கிய பராமரிப்பை வழங்குவதோடு, ஆன்மீக தேவைகளையும் நிறைவேற்றுவது” என்பதே. தேவனுக்கே மகிமை!

## Bible Quest – ல் CSI தமிழ் திருச்சபையின் பங்கேற்பு

“India Campus Crusade For Christ”, கிறிஸ்தவ விசுவாசிகள் வேத அறிவில் வளர்ந்து பெருகவும், விசுவாசத்தில் பலப்படவும் உதவும் நோக்கத்துடன் Bible Quest என்ற வேத வினா-விடைப் போட்டியை தேசிய அளவில் நடத்தி வருகிறது. வருடத்திற்கு ஒருமுறை நடைபெறும் இப்போட்டியில் நமது சபை அங்கத்தினர்கள் ‘வளைகுடா நாடுகளுக்கான’ பிரிவில் 2001 முதல் உற்சாகமாக பங்கு பெற்று வருகின்றனர்.

2015 மற்றும் 2016ஆம் வருடங்களில் அநேகர் இப்போட்டியில் பங்குபெறுவதை ஊக்குவிக்கும் விதமாகவும், கொடுக்கப்பட்ட வேதபகுதிகளை சிறப்பாக கற்க உதவும் விதமாகவும், சிறப்பு பயிற்சி தேர்வுகள் நம் திருச்சபை மூலம் நடத்தப்பட்டன.

எழுத்துத் தேர்வுகள், 2020-ல் இணைய வழித்தேர்வாக மாற்றப்பட்டதன் விளைவாக அநேக சிறுவர்களும் இத்தேர்வில் பங்கு பெற வழிவகுத்தது.

நமது சபை ஆயர் மூலமாக 2024-ல் கொடுக்கப்பட்ட சிறப்பு பயிற்சி வகுப்புகள் மற்றும் சிறப்பு உரைகள் கொடுக்கப்பட்ட வேதப் பகுதிகளை தெளிவாக கற்க உதவின. இம்முயற்சியின் விளைவாகவும் கர்த்தரின் கிருபையினாலும் நமது சபை அங்கத்தினர்கள் முதல் பரிசு, மையமுதற் பரிசு, மற்றும் வளைகுடா அளவிலான முதற்பரிசுகளைப் பெற்றனர்.

நமது சபை அங்கத்தினர்கள் இப்போட்டியில் தேவ நாமத்திற்கு மகிமை சேர்க்கும் விதமாக சிறப்பாக பங்கு பெற தொடர்ந்து கிருபையும்,

வழிகாட்டுதலையும் தருகிற நம் தேவனுக்கே எல்லாப் புகழும் மகிமையும் உண்டாவதாக! நாம் தொடர்ந்து வேதத்தை தாகத்தோடு வாஞ்சையோடு தியானித்து, எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்துவோமாக!

**திருமதி. கிஷி மஹேர்**

## தூது மாத இதழ் (Thoothu Magazine)

முதல் தூது மாத இதழ் நவம்பர் 2000 இல் வெளியிடப்பட்டது. அதற்கான குழு உறுப்பினர்கள்: திரு. மதிவானன், திரு. கருணாகரன் மோசஸ் மற்றும் திரு. ரெனால்ட் டேனியல். அட்டைப் பக்கம் திரு. தனபால் பிராங்க்லின் அவர்களால் வடிவமைக்கப்பட்டது.

அதன் பின்னர் தொடர்ந்து பொறுப்பேற்ற நிர்வாகக் குழு மூலம் இந்நாள் வரை பலவித மாற்றங்களுடன் தூது மாத இதழ் மாதந்தோறும் வெளியாகி வருகிறது. அருட்திரு. ஜாண் பிரைட் அவர்கள், சபை மக்களும் தூது பத்திரிக்கையில் கட்டுரைகள், துணுக்குகள் எழுத ஊக்குவித்தார்கள்.

வாக்குத்தத்தத்தோடு கூடிய ஆயர் மற்றும் ஆயரம்மா மடல், பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, மிஷனரிகள் வாழ்க்கை வரலாறு, பாடல் பிறந்த கதை, சிறுவர் மற்றும் பெரியோருக்கான வேதவினா என பல்வேறு வகைகளில் செய்திகள், துணுக்குகள் மற்றும் வேதவினாக்கள் மாதந்தோறும் நம் சபை மக்களை சென்றடைகின்றன. அதோடு கூட நம் ஆலய ஆராதனை நிகழ்வுகள், பாடல்கள், பாட ஒழுங்குகள், ஏரியா ஜெபக்குழுவின் வேதபாடங்கள் அனைத்தும் அதில் இடம் பெற்றுள்ளன. பிறந்த நாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துக்களும் அதில் இடம் பெற்றுள்ளது. நம் சிறார்கள் வேதவினாக்களுக்கு பதில் எழுத ஆர்வமூட்டும் வகையில், கடந்த நான்கு வருடங்களாக, சிறுவர்கள் பகுதி தனி மென் நகலாக அனுப்பி வைக்கப்படுகிறது.

வேதவினா பகுதியில் சிறியோரும் பெரியோரும் உற்சாகமாய் கலந்து கொள்கின்றனர். இதில் பங்கு பெறுவோரை ஊக்குவிக்கும் வகையில் வருடந்தோறும் பரிசு வழங்கப்படுகிறது. புத்தக வடிவில் வெளிவந்த தூது இதழ், கோவிட் தொற்றுக்குப் பின் மென் நகலாக (soft copy) வெளிவருகிறது. இந்த தூது மாத இதழ் ஒவ்வொரு மாதமும் மாத இறுதி ஜெபம் முடிந்ததும், அதிகாலையில் வாக்குத்தத்த வசனத்துடன் அனைத்து சபை மக்களையும்

சென்றடைகிறது. சிறுவர் பகுதியை திருமதி. ஜாஸ்மின் பிரின்ஸ், திருமதி. ஜான்சி ராஜ்குமார் ஆகியோர் தயாரித்தளித்தனர். அவர்களைத் தொடர்ந்து தற்போது டாக்டர் திருமதி. ப்ரிலியா ஜெயசீலன் அவர்கள் சிறுவர் பகுதியை தயாரித்து அனுப்புகிறார்கள்.

தூது புத்தகத்தின் உள்ளடக்கத்தை திருத்தி, சரிபார்த்து வெளியிடும் பொறுப்பை திரு. டேவிட்சன் ராஜ்மனோகர் அவர்கள், ஆயரின் உதவியோடு செய்து வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து திருமதி. ஜெபசீலி ஆசீர் அப்பணியை செய்து வருகிறார்கள்.

## CSI தமிழ் திருச்சபையின் இணையதளம்

**2010** ஆம் ஆண்டில், தேவாலயத்தின் முதல் இணையதளம் திருமதி ஷீபா டேனியல் அவர்களால் வடிவமைக்கப்பட்டது. பின்னர் திரு. கிரேப்சன் மற்றும் அவரின் குழுவால் புதுப்பிக்கப்பட்டது. தற்பொழுது திரு. கர்மேல் பிஷோ நமது இணையதளத்தை நிர்வகித்து வருகிறார். நம் ஆலய நிகழ்வுகள் மற்றும் ஆலயம் குறித்த அனைத்து காரியங்களையும் நம் தேவாலய இணையதளத்தில் **https://csitamilabudhabi.org/** கண்டுகொள்ள முடியும்.

## ஆலய பதிவு மற்றும் கட்டுமான குழு


**01-09-2023** அன்று நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில், நிர்வாகக் குழுவோடு சேர்ந்து, சட்ட ஒழுங்கின்படி, நம் ஆலயத்தை பதிவு செய்வதற்கான காரியத்தையும், நமக்கென்று சொந்தமாக ஆலயம் கட்டுவதற்கு தேவையான காரியங்களையும் செய்யும்படியாக ஆலய பதிவு மற்றும் கட்டுமான குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களாக கீழ்க்காணும் உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

திரு. ஜெயசீலன் காபிரியேல் – ஒருங்கிணைப்பாளர்

திரு. J. ரஞ்சித் குமார் ஜேக்கப்
திரு. D. தனசிங் ராஜேஷ்
திரு. K. பால் எமர்சன் கருணாகரன்
திரு. D. கிரேப்சன்
திரு. S. ரஜ்தா தாமஸ்
திரு. சாலமன் சுசீந்தர்
திரு. ஜெயகரன் பால்
திரு. S. டேவிட் பால்ராஜ்
திரு. அன்சல் ரெஜி

நம்முடைய ஆலயத்தின் வளர்ச்சிக்கும், தொடர்ந்து நமது சமூகத்தின் தேவைகளை சந்திப்பதற்கும், இந்தக் குழு உதவி செய்யும். இக்குழுவோடு சேர்ந்து பணி செய்ய, மேலும் சிலர் இக்குழுவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

# சில மைல்கற்கள்




## 13-05-1994

- முதல் ஆராதனை திரு. ஜாண் கிறிஸ்டோபர் அவர்களது இல்லத்தில் ஐந்து பேர்களுடன் 13-05-1994 நடந்தது. துபாய் திருச்சபையின் கிளை சபையாக அன்று முதல் செயல்பட்டது.

## நவம்பர் 1994

- முதல் ஆலய ஆராதனை Team Centre வளாகத்தில் (Evangelical Church Centre) உள்ள ஆலயத்தில் 04-11-1994 அன்று நடைபெற்றது.
- முதல் பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை 07-11-1994 அன்று நடைபெற்றது.

## 1995

- முதல் முசாபா முகாம் ஊழியம் திரு. அண்ணாதுரை மற்றும் சில சகோதர்களுடன் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்து.


## 1998 டிசம்பர்

- முதல் அறுப்பின் ஸ் திரு. கிறிஸ்டோபர் மற்றும் திரு. வடி விஜயகுமார் தலைமையில் டீம் சென்டரில் நடத்தப்பட்டது.
- முதல் கிறிஸ்துமஸ் மர விழா, அப்போது ஆசிரியராக இருந்த திருமதி. ஜாஸ்மின் ஜோஸ், திருமதி. ஷீபா டேனியல், திருமதி. ஹெலன் விஜயகுமார் மற்றும் திருமதி. செல்லா மோசஸ் ஆகியோர் மூலம் நடைபெற்றது.

## 29-12-1999

- சபையின் முதல் திருமணம் திரு. & திருமதி. பால் எமர்சன் கருணாகரன் அவர்களுக்கு அருட்திரு. வில்லியம் சாமுவேல் மற்றும் அருட்திரு. வி. டேவிட் ஆகியோரால் நடத்தப்பட்டது.





Wedding Invitation

This is the Lord's Doing
It is marvellous in our eyes
Psalm 118 : 23

**Mrs. & Mr. Victor D. Vasantharaj**
(U.N.D.F. - I.G.A. Project Adviser - Sayaboury - LAO - P.D.R.)

Solicit your prayers and presence
on the occasion of the
marriage of their eldest daughter

**VALENTINE ISABEL SHARMILA**
(Grand-daughter of Mr. D.S. Oliver - Retd. Personnal Inspector - I.C.F
& Grand-daughter of Mrs. Kamala William Samuel, Royapuram)

with

**PAUL EMERSON KARUNAKARAN**
(S/o Mrs. & Mr. Daniel Durairaj, Chennai-33, Retd., Commercial Service Officer, Wavin India)

to be solemnized on Wednesday, 29th December 1999
at 6.30 p.m. at the CSI Church in St. Andrew's Centre,
Abu Dhabi, U.A.E.
and thereafter to the reception
in the same premises.

With best compliments from :
Friends & Relatives

## 02-06-2000

அபுதாபி சபை, 01-10-2000 முதல் தனித்து செயல்படுவதற்கு துபாய் சபை பொது மன்றத்தில் அங்கீகாரம் பெற்றது.

## 14-09-2000

- சபையின் முதல் பொதுக்குழுக் கூட்டம் அன்று நடைபெற்றது. சபையின் அரசியலமைப்பு (constitution) அருள்திரு. டேவிட், திரு. ஜான் கிறிஸ்டோபர், திரு. ரெனால்ட் டேனியல், திரு. ராஜ்குமார், திரு. வடி விஜயகுமார், திரு. கருணாகரன் மோசஸ், திரு. மெர்வின் சந்துரு மற்றும் திரு. சூரியமணி ஆகியோரால் தயாரிக்கப்பட்டு, பொதுக் குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

## 26-10-2000

துபாய் போதகர் அருட்திரு. கமலசேகரன் அவர்களால் அபுதாபி திருச்சபை தனித்து செயல்பட ஆரம்பிப்பதாக அறிவிக்கப்பட்டது.



## 30-11-2000

• முதல் ஒடுக்கக்கூட்டம் திரு. கிப்சன் டேனியல் தலைமையில் நடந்தது.

## 07-12-2000

• முதல் திடப்படுத்தல் ஆராதனை நடைபெற்றது.

## 2000 டிசம்பர்

• முதல் Carol round ஆரம்பிக்கப்பட்டது.

## 28-12-2000

• முதல் ஞானஸ்நானம், கிறிஸ்டினா வசந்தா தாஸ்-க்கு (திருமதி & திரு.மரியதாஸ் அவர்களின் மகள்) கொடுக்கப்பட்டது.

## 02-02-2001

• முதல் இன்ப சுற்றுலா அபுதாபி விமான நிலைய பூங்காவில் நடைபெற்றது.

# ஆயர்களின் பட்டியல்

| தொடர் எண் | பதவி காலம் | ஆயர் |
|---|---|---|
| 1 | 1994 | Rev. AJM கேசரி (துபாய்) |
| 2 | 1994 – 1997 | Rev. J. ஸ்டீபன் (துபாய்) |
| 3 | 1997 – 2000 | Rev. வில்லியம் சாமுவேல் (துபாய்) |
| 4 | 1998 – 2001 | Rev. V. டேவிட் – Kanyakumari Diocese |
| 5 | 2001 – 2002 | Rev. Y. ஜேம்ஸ் பிரகாசம் – Vellore Diocese |
| 6 | மே 2002 – செப்டம்பர் 2002 | Rev. குமாரதாஸ் ( மெதடிஸ்ட் சர்ச்) |
| 7 | 2002 – 2006 | Rev. D. ஜாண் இர்வின் சார்ல்ஸ் – Tirunelveli Diocese |
| 8 | 2006 – 2010 | Rev. P.K. சாமுவேல் – Karnataka Diocese |
| 9 | 2010 – 2014 | Rev. பால் பிரபாகர் – Chennai Diocese |
| 10 | 2014 – 2017 | Rev. ஜாண் பிரைட் – Kanyakumari Diocese |
| 11 | 2017 – 2020 | Rev. ஜேம்ஸ் பால் – Trichy – Tanjore Diocese |
| 12 | 2020 – 2023 | Rev. ஜெரி ராஜ்குமார் – Coimbatore Diocese |
| 13 | 2023 – | Rev. Dr.A. சாமுவேல் – Tirunelveli Diocese |

## நம் திருச்சபையின் சபை ஊழியர்கள்

| தொடர் எண் | பதவி காலம் | பெயர் |
|---|---|---|
| 1 | 1994 – 1998 | Mr.I. சைமன் (துபாய்) |
| 2 | 2005 – 2008 | Mr. சூரியமணி |
| 3 | *2013 – 2014* | Rev. Mrs. யூனிஸ் ராஜமதி மனோஜ் |
| 4 | 2017 – 2020 | Mrs. பத்மா ஜேம்ஸ் பால் |
| 5 | 2017 – 2025 | Rev. சாமுவேல் ஜாண் தினகரன் |

# திருச்சபையின் ஸ்தாபக முன்னோடிகள்




## சபையின் பிரதிநிதிகள்

அபுதாபி திருச்சபை தனித்தியங்குவதற்கு முன் துபாய் திருச்சபையில், அபுதாபி திருச்சபையின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள்:

1. திரு. ஜி. ராஜ்குமார்

2 திரு. ஆர். ரெனால்ட் டேனியல்

3. திரு. வடி விஜயகுமார்

# நிர்வாகக் குழுவின் அலுவலக பொறுப்பாளர்கள்

| பதவி காலம் | உப தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|
| 2000 - 2002 | திரு. ஜாண் கிறிஸ்டோபர் | திரு. ஜி.ராஜ்குமார் | திரு. ஹென்றி ஜெயகுமார் |
| 2002 - 2004 | திரு. வடி விஜயகுமார் | திரு. கோயில்தாஸ் | திரு. ஹென்றி ஜெயகுமார் |
| 2004 - 2006 | திரு. வடி விஜயகுமார் | திரு. கோயில்தாஸ் | திரு. ஆசீர் கனகராஜ் |
| 2006 - 2008 | திரு. ஹென்றி ஜெயகுமார் | திரு. சுரேஷ் பிச்சைமணி | திரு. சுவாமி ராஜன் டேவிட் |
| 2008 - 2010 | திரு. ரஞ்சித் சிங் | திரு. ஜான்சன் /<br>திரு. ஜோகன்ஸ்பர் | திரு. சுவாமி ராஜன் டேவிட் |
| 2010 - 2012 | திரு. ஜாண் கிறிஸ்டோபர் | திரு. ஜி.ராஜ்குமார் | திரு. தியோடர் |
| 2012 - 2014 | திரு. ஜாண் கிறிஸ்டோபர் | திரு. பிரின்ஸ் ஜீவானந்தம்/<br>திரு. மில்டன் டென்னிசன் | திரு. அசோக் டென்னிஸ் |
| 2014 - 2016 | திரு. கிரேப்சன் | திரு. ஜி.ராஜ்குமார் | திரு. ஜாக்சன் |
| 2016 - 2018 | திரு. கிரேப்சன் | திரு. மில்டன் டென்னிசன் | திரு. விஜய் ஆனந்த் |
| 2018 - 2020 | திரு. ரெனால்ட் டேனியல் | திரு. ஜெயசீலன் கேப்ரியல் | திரு. ரஜ்தா தாமஸ் |
| 2020 - 2022 | திரு. கிரேப்சன் | திரு. ரஞ்சித் குமார்<br>ஜேக்கப் | திரு. நித்ய கிருபாகரன் |
| 2022 - 2024 | திரு. மில்டன் டென்னிசன் | திரு. ஜோகன்ஸ்பர் | திரு. சாமுவேல் பாஸ்கர் |
| 2024 - 2026 | திரு. மில்டன் டென்னிசன் | திரு. ரஞ்சித் குமார்<br>ஜேக்கப் | திரு. தனசிங் ராஜேஷ் |

# வெள்ளி விழா நிகழ்வுகள்

**2000** ஆம் ஆண்டில் தனி திருச்சபையாகத் தொடங்கப்பட்ட அபுதாபி CSI தமிழ் திருச்சபை, 2024–2025 ஆம் ஆண்டில் தனது 25ஆம் ஆண்டு (வெள்ளி விழா) கொண்டாட்டத்தை கொண்டாடியது. இந்த முக்கியமான நிகழ்வை நினைவுகூர, செயற்குழு ஒரு ஆண்டு முழுவதும் ஆன்மிகச் சேவைகள் மற்றும் நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டது.

1. **துவக்க ஆராதனை – 4ம் அக்டோபர் 2024**

வெள்ளி விழா ஆண்டு, 4ம் அக்டோபர் 2024 அன்று நடைபெற்ற சிறப்பு திருச்சபை தின ஆராதனையுடன் தொடங்கப்பட்டது.

- ★ துபாய், ஷார்ஜா, அஜ்மான் மற்றும் அல்-ஐன் பகுதிகளில் உள்ள குருவானவர்கள் அழைக்கப்பட்டனர்.




- ★ நிறுவனர் உறுப்பினர்கள் மற்றும் பிற எமிரேட்ஸ்களுக்கு மாற்றி சென்ற முன்னாள் திருச்சபை உறுப்பினர்களும் அழைக்கப்பட்டனர்.

CSI மலையாள திருச்சபை மற்றும் St.Andrews திருச்சபை பிரதிநிதிகள் கலந்து கொண்டதால், ஓர் மனமார்ந்த சகோதரத்துவ உணர்வை காணமுடிந்தது.

2. **விளையாட்டு & சகோதரத்துவ கூட்டுறவு நிகழ்ச்சிகள்**

திருச்சபை உறுப்பினர்களின் செயல்பாட்டை ஊக்குவிக்க கீழ்க்காணும் போட்டிகள் நடத்தப்பட்டன:

- ★ செப்டம்பர் – அக்டோபர் 2024-ல் ஆண்கள் கைப்பந்து, எறிபந்து, பெண்கள் எறிபந்து, பேட்மிண்டன் போட்டிகள்
- ★ பிப்ரவரி 2025 – ல் கிரிக்கெட் போட்டி



இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் அன்பையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்க துணையாய் இருந்தன.

### 3. அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகை (அக்டோபர் –நவம்பர் 2024)



நமது திருச்சபையின் அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகை நிகழ்வுகள் அக்டோபர் – நவம்பர் 2024-ல் நடைபெற்றன.

- ★ பல்வேறு கூடுகைகள் food stall, silent auctions மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தின.
- ★ அபுதாபி, மதினா சாயத் மற்றும் ருவெய்ஸ் திருச்சபை அங்கத்தினர்கள் அனைவரும் சேர்ந்து, திறந்த வெளியில் நடைபெற்ற அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகை விழா நிகழ்ச்சியில் பங்கெடுத்து சிறப்பித்தது அனைவருக்கும் மறக்கமுடியாத நிகழ்ச்சியாக இருந்தது.

### 4. அட்வெந்து & கிறிஸ்துமஸ் காலம்



அட்வெந்து காலங்களில் நிகழ்ச்சிகள் பல தொடர்ச்சியாக நடத்தப்பட்டன:

- ★ இயேசுகிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் கிறிஸ்மஸ் மரவிழா மற்றும் பாடல் ஆராதனை.
- ★ திருமணத்தையும் அதின் ஆன்மீக முக்கியத்துவத்தையும் நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்ட இளைய தம்பதியருக்கான கிறிஸ்துமஸ் ஒடுக்கக்கூட்டம்.
- ★ Outreach ஊழியத்தின் மூலம் கிறிஸ்துமஸ் பரிசுகள் சகோதரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.
- ★ 25ஆம் ஆண்டு நினைவுப் பரிசு அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.
- ★ குருவானவர் இல்லத்தில் நடத்தப்பட்ட Bachelor Christmas Fellowship தனித்து இருக்கும் நபர்களுக்கு சந்தோஷத்தையும் மன தைரியத்தையும் கொடுத்தது.
- ★ Carol rounds மற்றும் புத்தாண்டு ஆராதனையில் சபையின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இயேசுகிறிஸ்து கற்பித்த “பரமண்டலங்களிலிருக்கிற .... “ ஜெபமானது, வெள்ளி விழா சின்னத்துடன்(Logo), அழகான “Showpiece Stand” வடிவில் அனைவருக்கும் கொடுக்கப்பட்டது.




இந்த நிகழ்வுகள் கிறிஸ்மஸ் காலம் முழுவதும் ஒற்றுமையையும் கொண்டாட்ட உணர்வையும் கொடுத்தன.

### 5. புத்தாண்டு & 2025 தொடக்க நிகழ்ச்சிகள்

- ★ ஜூனியர் சர்ச் மற்றும் திருச்சபையின் picnic குடும்பங்களையும் சிறுவர்களையும் ஒன்றுகூடி மகிழச் செய்தது.



- ★ பேராயரால் நடத்தப்பட்ட திடப்படுத்தல் ஆராதனை இளைஞர்கள் மற்றும் பெரியோருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது.

### 6. குடும்ப ஒடுக்கக்கூட்டம் & சிறப்பு சந்திப்புகள்



50–60 குடும்பங்கள் கலந்து கொண்ட ஒரு நாள் ஒடுக்கக்கூட்டம்:

- ★ திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கையில் தேவனுடைய நோக்கம் என்பது மைய கருத்தாயிருந்தது.



### 7. தபசு காலம் (மார்ச் 2025)

சபை மக்களின் மனந்திரும்புதல், பிரதிபலிப்பு மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கு உதவும் சிறப்பு ஆராதனைகள் ஒழுங்கு செய்யப்பட்டது.

- ★ வருடாந்திர ஒடுக்கக்கூட்டம் மற்றும் கன்வென்ஷன் ஆன்மிக வளர்ச்சியையும் சபையின் ஆராதனையையும் ஊக்குவித்தது.

### 8. AIMS மாதம் – ஏப்ரல் & மே 2025



- ★ உலகெங்கும் உள்ள தேவ ஊழியர்களுக்காக பிரார்த்திக்கவும் அவர்களை கனப்படுத்தவும் ஏப்ரல் மாதம் AIMS மாதமாக அனுசரிக்கப்பட்டது.
- ★ முக்கிய நிகழ்ச்சியாக ஈஸ்டர் விருந்து - வாழையிலையில் தென்னிந்திய விருந்து, barbecues, மற்றும் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. அனைத்து வயதினரும் பங்கேற்று உணவு, உறவு, சந்தோஷம், நம்பிக்கை ஆகியவற்றை பகிர்ந்து கொண்டனர்.

**9. இசை மாலை – மே 2025**

திருச்சபை இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் இசை மாலை நிகழ்ச்சி மே-2025-ல் நடத்தப்பட்டது.

★ சிறுவர்கள் பாடல்கள், இசைக் கருவிகள் வாசித்து தேவனால் அளிக்கப்பட்ட வரங்களை வெளிப்படுத்தினர்.

இசையின் மூலம் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் ஆலய வழிபாட்டின் ஈடுபாட்டை வளர்ப்பதில் திருச்சபை எடுத்துக்கொள்ளும் முயற்சியை இது காட்டுகிறது.



**10. வெள்ளி விழா மலர் வெளியீடு**

★ 03-10-2025 அன்று வெள்ளி விழா நிறைவு விழா ஆராதனையில் நம் ஆயர் வெள்ளி விழா மலரை வெளியிட, உம் அல் குயின் ஆயர், அருட்திரு. ஜாண் கிஃப்ட்சன் அவர்கள் முதல் பதிப்பை பெற்றுக் கொண்டார்கள்.

**முடிவுரை**

அபுதாபி CSI தமிழ் திருச்சபையின் 25ஆம் ஆண்டு கொண்டாட்டம் – நன்றியும் சந்தோஷமும் நிறைந்த ஒரு ஆன்மிகப் பயணமாக அமைந்தது. துவக்க ஆராதனையிலிருந்து வெள்ளி விழா நிறைவு விழா ஆராதனை வரை நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியும், தேவனுடைய விசுவாசத்தையும், திருச்சபை குடும்பத்தின் அன்பையும் வெளிப்படுத்தின.

நம் திருச்சபை ஸ்தாபிக்க உறுதுணையாய் நின்ற நிறுவன உறுப்பினர்கள், தன்னார்வ ஊழியர்கள், ஜெபக்குழு தலைவர்கள், குடும்பங்கள், குழந்தைகள் – அனைவருக்கும் மனமார்ந்த நன்றி. உங்கள் ஜெபங்கள், நேரம், திறமை, அர்ப்பணிப்பு—அனைத்தும் இந்த வெள்ளி விழாவை நினைவு கூறத்தக்கதாக ஆக்கியது. அடுத்த 25 ஆண்டுகள் மேலும் ஆழமான விசுவாசம், வலுவான ஒற்றுமை, தேவனுடைய ராஜ்யத்திற்கான பெரும் தாக்கத்தால் நிறைவடைய பிரார்த்திக்கிறோம்.

கர்த்தர் செய்த மகத்தான காரியங்களுக்காவும், இன்னும் செய்ய இருக்கும் அதிசயங்களுக்காகவும் கர்த்தரை மகிமைப்படுத்துவோமாக! தேவனுக்கே மகிமை!

**குருவானவர் & செயற்குழு உறுப்பினர்கள்**
**2024 – 2026**

## Church

### For 25 Years...

A place of refuge from the storms of life
A place of comfort in moments of strife
A place of solace when hearts are sore
A place of joy that opens the soul's door

A place for tears that fall unseen
A place of reflection, deep and serene
A place of prayer, both whispered and loud
A place of love that draws a crowd

A place where stories rise and soar
A place that welcomes rich and poor
A place where silence holds its weight
A place where mercy conquers fate

A place where children laugh and run
A place where healing has begun
A place where strangers feel like kin
A place where hope is born within

A place for young, with dreams unrolled
A place for those who've long grown old
A place where broken hearts repair
A place that teaches how to care

A place of light through darkest night
A place where burdens feel more light
A place where souls are gently known
A place that many call their own

May this continue for many more—
A sacred space with an open door.

**Mrs. Priya Ranjith**

## பல்லாண்டு ஒளிரட்டும்!

அன்பினால் எங்களை வழி நடத்தி,
ஆசீர்வாதம் அனுதினமும் தந்து!
மற்றவர்க்கு சாட்சியாய் வளர,

இருபத்தைந்து ஆண்டுகள் ஒளியாக,
ஈகை செலுத்தி இத்தேசம் வாழ,
பலருக்கும் நம்பிக்கையாக விளங்க,

உயர்ந்த நன்மைகள் பல செய்து,
ஊற்றாய் ஆசீர்வாதம் பாயச் செய்து!
நன்மை செய்யும் கைகள் உருவாக,

என்றும் உம் கரத்தால் எங்களை காத்து,
ஏக மைந்தனின் அருளை பெற்று,
மக்கள் என்றென்றும் வாழ்ந்திட

ஒளி வீசி வாழ்வை நிறைவு செய்து,
ஓயாத கிருபையால் எங்களை நிரப்பி!
ஆசீர்வாதத்தின் ஒளி பரப்ப!
இவ்வாலயம் பல்லாண்டு ஒளிரட்டும்!

**Mrs.Desigta Jaison**

## ஆவியின் கனி - சந்தோஷம்

அப்போஸ்தலனாகிய பவுல் ஆவியின் கனிகளில் ஒன்றாக சந்தோஷத்தை (கலாத்தியர் **5:22**) குறிப்பிடுகிறார். சந்தோஷத்தின் கனியானது பவுலுக்கு இயல்பாக அமையப் பெற்றதையும், அதன் காரணமாக அவர் கிறிஸ்தவ மக்களுக்கு உதாரணமாக திகழ்ந்ததையும் பிலிப்பியர் நிருபத்தை பவுல் எழுதிய சூழலைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். வேத வல்லுனர்களும், ஆராய்ச்சியாளர்களும் பிலிப்பியர் நிருபம் எழுதப்பட்ட வரலாற்றை ஆராயும் போது கி.பி **61-62** வருடங்களில் பவுல் ரோம் நகரிலுள்ள சிறையில் காவலில் (பிலிப்பியர் **1:7,13,14,16**) இருந்தபோது எழுதப்பட்டது எனவும் பிலிப்பியர் புத்தகத்திலுள்ள நான்கு அதிகாரங்களும் கடிதங்களாக பிலிப்பு நாட்டு மக்களுக்கு எழுதப்பட்டு எப்பாப்பிரோதீத்துவின் (பிலிப்பியர் 2:28,4:18) வாயிலாக அனுப்ப பட்டது எனவும் சான்றளிக்கிறார்கள்.

இதிலென்ன ஆச்சர்யம் என்றால், பிலிப்பியர் நிருபத்திலுள்ள நான்கு அதிகாரத்தில் சந்தோஷம் என்ற வார்த்தை பதினான்கு முறையும், மகிழ்ச்சி குறித்து நான்கு முறையும்

வருகிறது. பொதுவாக சிறையில் அடைபட்டிருக்கும் நபர்களுக்கு வெளிப்படும் எதிர் மறையான எண்ணங்களுக்கு பதிலாக நேர்மறை எண்ணமான சந்தோஷத்தை பவுல் திரும்ப திரும்ப குறிப்பிடுவது உண்மையில் வியப்பானது. நான் பண்ணுகிற ஒவ்வொரு விண்ணப்பத்திலும் உங்கள் அனைவருக்காகவும் சந்தோஷதோடே விண்ணப்பம் பண்ணி (பிலிப்பியர் **1:4)** என எழுதியிருப்பதை நோக்கும்போது தான் சிறையிலிருப்பினும் பத்தாயிரம் கிலோமீட்டர்களுக்கு மேல் தொலைவிலுள்ள மக்களை நினைவுகூர்ந்து விண்ணப்பிப்பது சிறப்பானது.

அமீரகத்தில் வசிக்கும் பிலிப்பைன்ஸ் நாட்டு மக்கள் மிகவும் உற்சாகமானவர்கள். காலையில் பணிக்கு எப்படி உற்சாகமாக வருகிறார்களோ மாலையும் அதேபோல் உற்சாகம் குறையாமல் காணப்படுவார்கள். அவர்களின் சிரித்த முகங்களை காணும்போது பவுல் மிஷனரியாக இயேசு கிறிஸ்துவின் அன்பையும், அவர் நமக்காக, நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, மூன்றாம் நாள் உயிர்தெழுந்தார் என்ற சுவிஷேசத்தையும் அந்நாட்டு மக்களுக்கு அறிவித்தது (அப்போஸ்தலர் 16:12) எண்ணங்களாக மனதில் தோன்றி மறைகிறது.

மனிதர்களின் வயதிற்கேற்ப சந்தோஷத்தின் எல்லைகளும், கால அளவுகளும் மாறுபடுகிறது. பள்ளி செல்லும் சிறார்களுக்கு விடுமுறை தினங்கள் வந்து விட்டால் ஒரு சந்தோஷம்.விளையாடும்போது ஒரு சந்தோஷம்,விரும்பிய பொருள் கிடைக்கும்போது ஒரு சந்தோஷம்,நல்ல மதிப்பெண்கள் வாங்கும்போது ஒரு சந்தோஷம், குடும்பமாக பண்டிகைகளை கொண்டாடுகையில் ஒரு சந்தோஷம், கிறிஸ்துமஸ் காலங்களில் ஒரு சந்தோஷம், பெரியவர்களுக்கு வேலை செய்யுமிடத்தில் சம்பள உயர்வு, பதவி உயர்வு, சமூகத்தில் ஒரு அங்கீகாரம் கிடைக்கும்போது ஒரு சந்தோஷம், இன்றைய நவீன யுகத்தில் முக நூலில் நமது புகைப்படத்தையோ செய்தியையோ பரிமாறுகையில் கிடைக்கும் like மற்றும் comment களின் போது சில நொடி ஏற்படும் சந்தோஷம் என சொல்லி கொண்டே போகலாம்.

கிறிஸ்தவர்கள் மத்தியில் மிகப் பிரபலமான 'கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாக இருங்கள்' (பிலிப்பியர் **4:4)** வசனத்தை தொடர்ந்து, பவுலின் சந்தோஷத்திற்கு காரணம் என்னவென்பதை தொடர்ந்து வாசிக்கையில், நம் இன்றைய வேகமான நவீன வாழ்க்கை முறைக்கு ஒரு செய்தியை பகிர்ந்து அளிக்கிறார். நான் எந்த நிலையிலும் மன ரம்மியமாயிருக்க கற்று கொண்டேன். (பிலிப்பியர் **4:11),** எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாய் இருக்கவும், பரிபூரணப்படவும் **(4:12)** என குறிப்பிடுகிறார்.

ஞாயிறு வேத பாட வகுப்பின் மூலமாகவும் விடுமுறை வேதாகமப் பள்ளியின் மூலமாகவும் நம் மனதில் ஆழப்பதிந்த ‘அத்திமரம் துளிர்விடாமறபோனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன்

அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமல் போனாலும், நான் **கர்த்தருக்குள்** மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்' வசனங்களிலுள்ள ஜீவனும், கருப்பொருளும் பிலிப்பியர் 4:11s,12 வசனங்களில் பிரதிபலிக்கிறது.

மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மைசெய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன். (பிரசங்கி 3:12)

**திருமதி. ஜாஸ்மின் மனுவேல் ஏசுடியான்**

## இயேசு கிறிஸ்து ஒரு அற்புதமான குரு

**த**ன்னை மறுதலிக்க போகின்றவனையும்
காட்டிக் கொடுக்க போகின்றவனையும்
முன்பே அறிந்திருந்தும் கூடவே வைத்திருந்தார்..
சமூகத்தால் எதிர்க்கப்பட்ட
பாவியாகிய சகேயுவின் வீட்டில் தங்கியவர்..
மன்னிப்பவர்…
மனதுருக்கம் நிறைந்தவர்…
எளிய மக்களை நேசித்தார்..
கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? என்றவர் இந்த லௌகீக வாழ்வின் எந்த சிக்கல்களிலும் மாட்டிக்கொள்ளாமல்
பறவையை போல சுதந்திரமாக வாழ்ந்தவர்..
இந்த பூமிக்கு எந்த நோக்கத்திற்காக வந்தாரோ
அதை பூரணமாய் நிறைவேற்றியவர்..
தான் வாழ்ந்த காலத்தில்
கடைசி மட்டும் நல்ல மனிதராக,
எல்லோரையும் அன்பால் அரவணைத்து சென்றார்…
அந்த அன்பு தான்
அவரிடத்தில் விசேஷமானது..
ஆம்…இயேசு கிறிஸ்து ஒரு அற்புதமான குரு..

**திரு. S.மனுவேல் ஏசுடியான்**

## தீ பற்றவைப்போம்

இவ்வுலகில் எத்தனை எத்தனை மனிதர்கள், எத்தனை எத்தனை சந்திப்புகள், வாழ்க்கையை அழகாக்க, அனுபவிக்க எவ்வளவோ வாய்ப்புகள். இரண்டு மனிதர்கள் சந்திக்கும் போது நடக்கும் உணர்வு பரிமாற்றங்களில் அன்பு தான் அவ்வுறவை பிணைத்து நிலைக்க வைக்கும் என்றால் அது மிகையல்ல. அன்பு என்பது வெளிப்படுத்தப்பட்டு அனுபவிக்க வேண்டிய அற்புதமான உணர்வு. அன்புக்கு ஏங்காத உயிரினங்கள் காண்பது அரிது.

"அன்பு ஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"
என்ற குறளில் திருவள்ளுவர் குறிப்பிடுவது போல "குடும்பம், உறவு என்பாரிடத்துக் கொள்ளும் அன்பு, உலகத்தவரிடம் எல்லாம் உறவு கொள்ளும் விருப்பம் உண்டாக்கும். அதுவே அனைவரையும் நட்பாக்கும் சிறப்பையும் உண்டாக்கும்". ஆனால் குடும்பத்தினரிடையே அன்பு வெளிக்காட்ட தயங்கி கொண்டிருக்கும் சூழலில் பக்கத்து வீட்டில், கடைத்தெருவில், சந்தையில், பேருந்தில், தொடர்வண்டியில், அலுவலகத்தில் சந்திக்கும் மனிதர்களிடம் அன்பு செலுத்துவது நம் சிந்தனையில் உறைக்காமலே போயிருக்கலாம். அவர்கள் நம்மவர்கள் இல்லை என்ற எண்ணமே முக இறுக்கத்தின் மூலம் வெளிப்படுகிறது.

"இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்" என்ற வசனம் நம் சிறுவயது முதல் கேட்டு, படித்து, வாசித்து வளர்ந்த விஷயம். இந்த வார்த்தையின் பால் நம்மில் பலர் வறியவருக்கு சிறிய, பெரிய பொருளுதவி செய்து வருகிறோம். நன்று. "எதை" என்பது வெறும் பொருளுதவியில் மட்டும் முடிந்து விடுவது அல்லாது நாம் செய்கிற ஒவ்வொரு செயலும் நாம் இறைவனுக்குச் செய்ததாகவே கணக்கில் வரவிடப்படுகிறது. இவ்வுலகின் பால் செய்யும் அன்பும் இறைவனுக்கு செய்ததாக கருதப்படும்.

"அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்." (1 யோவான் 4:16). அன்பு செலுத்துவதற்கு ஆகபெரிய தகுதிகள் தேவையில்லை. நமது கடந்த காலத்தில் அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும், செய்த பாவங்கள் ஏற்புடையதாக இல்லாமலிருக்கலாம், எதிர்காலத்திலும் இறைவனூடான பயணத்தில் சாத்தானால் இடறுகள் ஏற்ப்படலாம். எனினும் இறைவன் அருளிய வார்த்தைகளையும் உடன்படிக்கைகளையும் பின்பற்ற முயன்று கொண்டே இருக்கும் போது நாளுக்கு நாள் நாம் பலப்பட்டுக்கொண்டே இருப்போம். அந்த பலத்தின் ஊடே நாம் இவ்வுலகை நேசிப்போம்.

அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அகங்காரமானதைச் செய்யாது, தற்கேள்வியை நாடாது,

சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்.” (1 கொரி. 13:4 – 7)

அன்புக்கு வேற்றுமை தெரியாது. நமது பகையாளிகளையும், நம்மை எதிரிகளாக நினைப்பவர்களையும் அன்பு வென்றெடுக்கும். நமது மனதில் விரோதம் இருந்தால் ஒழிய அன்பு தடைபடாது வெளிப்படும். அன்பு வெளிபடுத்த நாம் கட்டியணைத்து ஒன்றாக உணவருந்தி, அவர்களுடன் எப்போதும் இருக்க வேண்டும் என்பது அல்ல. இவ்வுலகின் மீது அன்பு செலுத்தும் போது நம்மையறியாமல் இவ்வுலகையும் உயிர்களையும் நேசிக்க தொடங்கி விடுகிறோம். அந்த நேசமே முகமலர்ச்சியாக வெளிப்படும். நம்மை விரும்பாதவர்களையும் புதியவர்களையும் சந்திக்கும் போது நாம் உதிர்க்கும் சிறு புன்னகை இறுக்கமான சூழ்நிலையையும், மற்றவர் நம் மீது கொண்ட புரிதலையும் மாற்ற வல்லது. சிறு தீப்பொறியின் தீண்டலில் பற்றி படரும் காட்டு தீ போல, மத்தாப்பின் சிறு முத்தமிடலில் வானவேடிக்கை காட்டும் புஸ்வானம் போல புன்னகை என்னும் தீப்பொறி கொண்டு தயக்கம் தவிர்த்து பகை முடித்து மனவுலகை கொளுத்துவோம், மகிழ்ச்சியொளி எங்கும் பரவட்டும். பிரபஞ்சம் முழுவதும் அன்பும் அமைதியும் தழைக்க எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்து அருள் புரிவாராக.

அன்பு ஒருக்காலும் ஒழியாது... (1 கொரிந்தியர் 13:8)

அன்புடன்

**திரு. அருண் ஜெபஸ்டின்**

## Countless Blessings

At daybreak, the sun smiles
Aroma of lush greenery
Sweet melody of love
Is thy blessing me?

Goodness pouring as I look up
Battle fought without weapons
Light fading the darkness
Is thy blessing me?

Time counts days of disparity
The flowing river of purity
Cleansing the wicked amongst them
Is thy blessing me?

**Miss. Caroline**
( D/O Mr. Danial Abraham)

## The Carpenter's Craft – Short Story

A skilled carpenter named **Jacob** was known for his patience. One day, a customer asked him to build a beautiful wooden table. Jacob worked on the table slowly, carefully measuring and crafting each part.

His friends would often ask,
**"Why are you taking so much time? You could finish much faster."**

But Jacob always replied,
**"A good work of art takes time. It's not just about finishing quickly, but doing it well."**

After many days of careful work, the table was complete. It was perfect—each joint was smooth, and the wood gleamed. The customer was so impressed that they paid Jacob double what was agreed.

Jacob smiled and said,
**"Patience makes all the difference in the end."**

**Moral of the Story:**
*Patience in the process brings forth the best results.*
(Proverbs 14:29 – "Whoever is patient has great understanding, but one who is quicktempered displays folly.")

**Mr. Rajaguru Sekar**

## The Judge and the Dispute – Short Story

In a small village, there was a wise judge named Samuel. One day, two men came to him with a dispute over a piece of land. Each man claimed the land was his, and they were both angry and unwilling to compromise.

The judge listened carefully to both sides and then said,
**"I will not judge based on your words alone. I will walk the land myself and see what is true."**

For days, the judge examined the land, asking questions and gathering evidence. Finally, he called both men to his court and said,
**"The truth is clear now. Both of you have been acting out of greed, and neither of you has been honest. This land will be shared between you both equally, and you will work together to make it prosperous."**

The two men were surprised by the judge's fairness and wisdom. They realized that their greed had clouded their judgment, and they learned the value of **honesty** and **fairness**.

**Moral of the Story:**
Good character is shown in the way we treat others, with fairness and integrity, even when it's difficult.
(Proverbs 21:3 – "To do what is right and just is more acceptable to the Lord than sacrifice.")

**Mrs. Hema Alphonsa**

## ஆவிக்குரிய குடும்பம்

"ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரு நாள் நல்லது; ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப் பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன்."

– சங்கீதம் 84:10

அமீரக அபுதாபிக்கு வந்தோம் வேலைக்காக
நம் தேவனை ஆராதிக்க வாஞ்சித்தோம்
கிடைத்தது CSI தமிழ் திருச்சபை
இங்கே கண்டோம் நம் ஆவிக்குரிய குடும்பத்தை!
இருபத்தைந்து ஆண்டுகளாக பலபேரின் ஆத்துமாக்களை
தேவனிடத்துக்கு நேராக வழிநடத்தி ஆசீர்வதித்து
எல்லாரும் சொந்த ஊரின் ஆராதனையை
தொலை தூரத்திலும் ஆராதிக்க கிடைத்தது ஆசீர்வாதம்!

அல்-யென், ரூவைஸ், மதினத் சாயத் என்ற சபைகளை எழுப்பினோம்
கடந்து வந்த பாதைக்கு நன்றிகளை சொல்லுவோம்
வருங்காலத்தில் பலரை இணைப்போம் சபையில்
நூற்றாண்டுகளாக சபை விரிவடைய பிரார்த்திப்போம்!

**திருமதி. D.R. அஜித்தா எபி**

## என் விடிவெள்ளி

இருளில் என் வெளிச்சமானவரே
என் பாரங்களையெல்லாம் லெகுவாக்கி மகிழ செய்தவரே
உம் உள்ளங்கையில் என்னை வனைந்து புடமிட்டு உருவாக்கினீரே
அலைகடலும் உம் சொல்லுக்கு செவி சாய்க்குமே - என் கன்மலையே
அடியேன் உம் சொல் கேளாமற்போவேனோ!

எனக்காய் உம் கரங்கால்களில் ஆணியேற்றீரே
ஈட்டி பாய்ந்த உம் நெஞ்சோடு என்னை அனைத்தீரே
இக்கட்டில் கிருபையாய் வழிநடத்தி விடுதலையளித்தீரே
என்னை பெலப்படுத்தி நிலைநிறுத்தினவரே - என் கோட்டையே
அடியேன் உம்மை மறந்து போவேனோ!

நெருப்பிலும் பெருங்காற்று மழையிலும் எனக்கரணானவரே
என் துக்கத்தை பேரானந்தமாய் மாற்றினவரே
அமைதியற்ற வாழ்வில் என் துணையானவரே
உம்மோடு பந்தி சேர அழைத்தீரே - என் நம்பிக்கையே
அடியேன் உம்மை நினையாமற்போவேனோ!

அளவில்லா கிருபையின் வேந்தே
அளவற்ற அன்பினால் என்னை சிநேகித்தீரே
உம்மை முகமுகமாய் காண என் ஆவலே
நீர் வருமளவும் உம்மைப் பாடி புகழ்வேனே - என் இயேசுவே
அடியேன் உம்மை வணங்காமற்போவேனோ!

**- டாக்டர்.ல.ஜெனிலா ஞானராஜ்**

## வாழ்த்து மடல் - அமைதியின் மரம்

**25** ஆண்டுகளுக்கு முன் விதைத்த விதை ஒன்று

ஓங்கி ஓய்யாரமாய் வளர்ந்து விழுதுகள் பல கொண்ட ஆலமரமாய்,
தாயகம் விட்டு புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் வேடந்தாங்கலாய் ,
வந்தாரை அரவணைக்கும் தாயாய்,
தனிமையில் ஏங்கும் அனைவருக்கும் ஆத்ம உறைவிடமாய்,
இறைவன் தந்த உயிரான **C S I** அபுதாபி தமிழ் திருச்சபை ஒரு

அமைதி தரும் அன்னை மரமாய்
ஆனந்தம் தரும் இனிய மரமாய்
இறை வார்த்தை தரும் போதி மரமாய்
ஈகையை கற்று தரும் கருணை மரமாய்

உன்னதரின் ஆசி தரும் ஆசீர்வாத மரமாய்
ஊழ்கம் செய்யும் இறையடி மரமாய்
எக்காலமும் எக்காளம் முழங்கச்செய்யும் வெற்றியின் மரமாய்
ஏத்தல் செய்திடும் ஆத்துமாக்களின் ஆராதனை மரமாய்

ஐக்கியமாய் கூடி ஐயனை தொழுதிடும் தொழுகை மரமாய்
ஒட்பம் தரும் ஞான மரமாய்
ஓகாரவுருவை தரிசிக்கும் தரிசன மரமாய்
ஔவியமில்லா இனம் கூடும் சமாதானத்தின் மரமாய்

இன்னும் பல விழுதுகள் கொண்டு
உயர்ந்து வளர்ந்து,
அண்டி வருவோருக்கு
அடைக்கல மரமாய்

பல்லாண்டுகள் வளர்ந்து,
பல்லாயிரம் சந்ததிகளுக்கு
ஆத்ம நிழலாய் நிலைத்திட
இறை ஆசி வேண்டி வாழ்த்துகிறோம்

****ஓகாரவுரு – கடவுள்*** ****ஔவியமில்லா - பொறாமையில்லா/வேற்றுமையில்லா***
****ஊழ்கம் – தியானம்*** ****ஏத்தல் – துதி***
****ஒட்பம் - அறிவு - தெய்வ அறிவு***

**திரு. ஜார்ஜ் கிருபாகரன் & திருமதி. ஷெர்லின் செல்வி**

## 25 Years of Home, Heart & Heaven

**Happy Anniversary to My Home Church in Abu Dhabi!**

As my home church in Abu Dhabi celebrates 25 years, I find myself swimming in a sea of memories—tender, loud, sacred, and joyfully chaotic. That church wasn't just a building. It was my safe place, my launchpad, my second home. It's where I first found the Lord, where I stumbled into faith and friendship, often both at once.

I can't help but reflect on the fact that we quite literally grew up together. I'm 23 now—and that means nearly every chapter of my life has been touched by this church in some way. From toddlerhood to teenage years, from scripture songs to sleepless youth nights—it was all shaped within those beloved walls.

Every Thursday, like clockwork, I'd race from school to tuitions, and from tuitions to Junior Church—heart full, stomach empty, and spirit expectant. I remember only seeing my parents at church on those days, all of us orbiting life in different directions but anchored in that one shared sanctuary.

The Junior Church was a treasure trove. Songs, scripture, games, and giggles. They didn't just teach us Bible verses—they etched them into our hearts. I'll never forget being handed *Psalm 119* for a memory competition. All 176 verses. At the time, it felt like a divine prank. But today, I carry those words like a quiet strength I never knew I was storing up. And oh, the post-service madness! Dinner with church family, running barefoot in the backyard, clinging to those last few minutes with friends before parents finally—after 27 rounds of "Come Pappa, Let's go "—herded us home. Sometimes we stayed till midnight, chatting away under the soft glow of church lights, the air thick with stories, laughter, and late-night wisdom.

Winters meant BBQ nights—crackling fires, unbeatable food, aunties with their secret chutneys, uncles manning the grills like generals, and kids plotting games that ended in joyful chaos. Pure, unfiltered magic.

Even now, miles away, I feel tethered to that place. I've yet to find a community quite like it—one that feels like family from the moment you step in. It's a reminder that the Church isn't just four walls and a sermon. It's the laughter of children, the echoes of worship, the stubborn faith of elders, and the love that lingers long after the last benediction.

Happy 25th, to the place that made me. Thank you for raising me in faith, wrapping me in community, and giving me a lifetime of Thursdays to remember.

**Miss. Elizabeth Radja**
(D/O Mr. Radja Thomas)

## A Journey of Faith, Music, and Growth

Looking back, it's incredible to see how God has woven purpose and grace into every chapter of my life through CSI Tamil Parish Abu Dhabi. From the time I was a child, Junior Church was the place where I began learning about Jesus—not just through stories and songs, but through moments of prayer, fellowship, and reflection that planted seeds of faith early on.

I was one of those kids who actually loved writing the Thoothu book answers. Page after page, month after month, I learned to think, reflect, and connect Scripture with everyday life. It wasn't just homework—it became a quiet discipline that helped shape my spiritual foundation and personal values as I grew.

As I got older, God opened a new door through music. I became the church organist, and for the past five years, that has been one of the greatest honors of my life. Playing for worship services has taught me humility, discipline, and joy. But the blessings didn't end there—I've also had the privilege to play in my home church in Sonaganvilai and an English church in the UAE. Each experience reminded me that when we give our gifts back to God, he multiplies them in ways we never imagined.

Now, as I prepare to enter college, my heart is full of gratitude. This church didn't just teach me how to serve—it taught me how to live with faith, compassion, and conviction. Through the ups and downs, the worship and the Word, the Thoothu reflections and the music ministry, CSI Tamil Parish Abu Dhabi has been the place where I was spiritually formed.

Whatever lies ahead in this next season, I step forward holding onto everything I've learned, ready to walk in the calling that God has placed on my life. To Him be all the glory.

**Mr. Abner Grapeson**

## From Junior Church to Music Ministry: A Testimony of Transformation

Growing up in CSI Tamil Parish Abu Dhabi has been one of the most defining blessings of my life. From childhood Fridays spent in the Junior Church to serving today as the organist and violinist, this congregation has nurtured my faith, my character, and my calling. Every corner of this church echoes with memories, lessons, and moments of worship that shaped the person I've become.

One of the most transformative realizations I've had is this: I play music not for applause, not for attention, but for the glory of God alone. This understanding anchors me every

time I step forward to serve. Through each chord on the organ and each bow stroke on the violin, I am reminded that music is my offering—a way to express worship, surrender, and joy before the Lord.

Embracing a spirit of humble service and joyful obedience, I've witnessed God open remarkable doors in my life. Through my ministry in this church, I've had the privilege to play in my home church in Sonaganvilai and in the Anglican Church in the UAE. I've also had the opportunity to sing in a church in Ooty when I visited—an experience that arose from the voices of worship raised in this congregation. These moments have not only deepened my personal walk of faith, but also uplifted the spiritual lives of many members in those churches, reminding me that music, when surrendered to God, becomes a powerful vessel of encouragement, unity, and transformation across borders and communities.

The nurturing spirit of CSI Tamil Parish—through its leadership, fellowship, and faith-filled atmosphere—has helped me become someone who values compassion, spiritual discipline, and community. I've learned to lead with humility, serve with purpose, and grow with grace. If I am considered an amazing person today, it's because this church has been faithfully planting seeds of strength and love in my life for years. All Glory to God alone.

**Miss. Keren Grapeson**

## My Life At CSI Tamil Church, Abu Dhabi

They say that there are many things that shape a person in childhood; family, friends, environment etc. I can say with pride that the CHURCH has played such a pivotal role in who I am today. Growing up, the church, for me, was not just a place of worship. It was where my extended family was….a second home to me.

When I hear the words, CSI Tamil Church, Abu Dhabi, a rush of emotions flood my mind. So many happy memories, moments to cherish, moments of pride and joy.

This was the place that helped me develop my talents. This was the place that taught me that the church wasn't just a place, it was a second home. This place, the people, have always been and still are, I hope, a positive and encouraging source not just for the adults but also for the little ones. I speak for all my friends at church when I say that this kind of a positive atmosphere has been a source of great motivation and love to all of us.

Our Sunday school, the teachers…I miss them all dearly. Jasmine aunty, Suniti Aunty, Jebaseeli aunty…….they were all like our second mothers, guiding us and gently chastising if we were to do something wrong.

I still remember our yearly Christmas programs and the practices leading up to it …..all our teachers would put their heart and soul into giving the best performances and we kids would have the best days enjoying during practices. Mom and dad even had a few practices at our home and we would have a gala time practicing very little and chatting

away the rest of the time. Suniti aunty would come up with the hardest songs to sing even with four-part harmony! And it would always amaze me how much trust she had in us kids, that we would be able to pull off those songs ….. .and we did, all thanks to her of course!

And then we had our weekly choir practices that I cherish so dearly. This was the place where I wasn't judged for my mistakes and was always given a pat on my back for trying. I remember our dear Danny uncle teaching with so much patience, time and effort. He would point out our mistakes in the politest way possible. And the choir members, my dear uncles and aunties competed with each other for the silliest of things, like who would reach the parsonage first or which group would sing better, tenors or basses. Now that I think about those days, I yearn to be as playful and fun-loving as they were.

And how could I forget the infamous harvest festivals, a day of pure delight for us kids. We'd wait for the harvest festival to be declared open and go from stall to stall tasting all the yummy food and playing the lucky dip. And once it was all over, cleaning up would also be another entertaining task. All of us kids would be playing at the back of the church while our parents were happily clearing up and we would be there till 11 or 12 am right until the lights were turned off.

This was my childhood. My happiest moments have been and will forever be my beautiful childhood at the Church. I'm beyond blessed that my family has been a part of this church growing up.

This church and the memories that go with it will forever be etched in my mind as a beautiful period in my life. It is such a joy to hear that the 25th anniversary is being celebrated this year. My wish is for many people to be blessed and inspired by the CSI Tamil Church just as how I and my family were.

THANK YOU!

**Mrs. Debbie**
(D/O Mr. Rajkumar)

## வளர்ச்சி ஆண்டு 2025

தேவன் தந்த இந்த வளர்ச்சியாம் ஆண்டில்
தேவன் அருளும் நல்ல கிருபையை தேடி
அனைத்து நன்மைகளும் பெருகிட
அவரையே சார்ந்திருப்போம்.

விசுவாசத்தில் நிலைத்திருப்போம்
நிறைவான வாழ்வை அடைந்திடுவோம்
அனைத்து நன்மைகளும் பெருகிட
ஜெபத்தில் தரித்திருப்போம்

1) பின்னானதை மறந்திடுவோம்
முன்னானதை நாடுவோம்
பழையதை களைந்திடுவோம்
புதியதை ஏகுவோம்
பரம அழைப்பை நாடி
தொடர்ந்து ஓடிடுவோம்

2) கிருபையால் நிறைந்திடுவோம்
பூரணமாய் பெருகிடுவோம்
நம்பிக்கையில் சார்ந்திருப்போம்
மகிழ்ச்சியில் திளைத்திருப்போம்
தேவ தயவை நாடி தொடர்ந்து ஓடிடுவோம்

3)எளியோரை தாங்கிடுவோம்
நற்செய்தி கூறிடுவோம்
கர்த்தரையே உயர்த்திடுவோம்
அவருக்காய் வாழ்ந்திடுவோம்
தேவ பலனை நாடி தொடர்ந்து ஓடிடுவோம்

**TCA Prayer Fellowship**

## அமீரக அமுது - அபுதாபி CSI தமிழ் திருச்சபை

உறவு மலரும் உன்னத இடம் CSI தமிழ் திருச்சபை,

உள்ளம் ஒன்று சேரும் இடம் CSI தமிழ் திருச்சபை
உணர்வு பெருகிட உறவு அமைந்திட
உண்மை வழி செல்லும், வாழ்வு நமது ஆலயம்!

வாழ்விற்கும் வழிபாட்டிருக்கும் சொல்லுக்கும் செயலுக்கும்
வித்தியாசங்கள் தோன்ற பரந்த இந்த அமீரகத்தில்
CSI தமிழ் திருச்சபை மூலம் உன்னத படைப்பாய்
உலகில் வாழ அழைப்பு விடுகின்றது நமது திருவழிப்பாடு !

நமது CSI திருச்சபையில் வழிபாட்டிற்காய்
கூடும்போது இதயங்கள் கொழுந்துவிட்டு எரிகின்றன
இந்த புனித இடத்தில் அன்பு பிரகாசிகட்டும்
அவருடைய கிருபை சூழ்ந்து இதயங்கள் புதிதாகட்டும் !

ஒரு நம்பிக்கையின் தூய ஒளியை நோக்கி
பிரகாசமாக பிரகாசித்து ஒன்றாக பயணிப்போம் !!

**Mrs. Sheeba David**

# இன்றைய சிறுவர்கள் .... நாளைய தூண்கள்......

அந்நிய நாட்டில் இருந்தாலும், நம் சொந்த தாய்மொழியில் தேவனை தொழுதுகொள்ளும் நம் ஆலயத்தில், இன்று அநேக சிறுவர்கள் உள்ளனர். அவர்களின் வசனத்தை கேட்கும் ஆர்வமும், துடிப்புடன் கூடிய உற்சாகமும், வசனத்தை அவர்கள் வாஞ்சையுடன் மனப்பாடம் செய்து கொள்ளும் விதமும் நமக்கு சந்தோஷத்தை தருகின்றன. நம் கையில் இத்தகைய திறமையுள்ள, புத்தி கூர்மையுள்ள சிறுவர்களைக் கர்த்தர் கொடுத்துள்ளார். நம்மை நம்பி நம்மிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள நம் திருச்சபையின் எதிர்கால தூண்களாகிய நம் பிள்ளைகளுக்கு பெற்றோராகிய நம்முடைய பங்களிப்பு என்ன?

**வீட்டில்......**

உபாகமம் 6:7 கூறுவது போல், நம் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் கர்த்தருடைய வசனத்தைக் குறித்துப் பேசி, அதன்படி நடக்க அவர்களுக்கு கற்றுகொடுக்க வேண்டும். குழந்தையின் முதல் hero & heroine, அக்குழந்தையின் அப்பாவும் அம்மாவும் தான். நாம் வேத வசனத்தை கடைபிடித்து வரும்போது அக்குழந்தையும் தானாக அதைக் கடைபிடிக்க ஆரம்பித்துவிடும்.

**ஆலயத்தில்.......**

நம்முடைய கவனம் சிதறாது ஆலயத்தில் இருக்கவேண்டுமாயின் அதற்கு தகுந்த ஆயத்தம் வேண்டும். தூது பத்திரிக்கையில் ஆலய பக்கத்தில் உள்ள மூன்று வேதபாடங்களையும் ஆலயத்திற்கு வருமுன்பே நம் பிள்ளைகளுக்கு ஒரு sticky note அல்லது book mark மூலம் குறித்து கொடுக்கலாம். வேத வாசிப்பு வரும்போது அந்த பகுதியை நம் பிள்ளைகள் வாசிக்க அது மிகவும் உதவியாயிருக்கும். இப்போது பிள்ளைகள் வயதிற்கேற்ப வேதாகமங்கள் அநேகம் உள்ளன. அவைகளை நாம் வாங்கிக் கொடுத்து, பிள்ளைகள் வேதபாடங்களை வாசிக்க நாம் உற்சாகப்படுத்த வேண்டும். அதற்கு நாம் முதலாவது செய்ய வேண்டிய காரியம், வேதாகமத்தின் 66 புத்தகங்களையும் நம் பிள்ளைகள் மனப்பாடம் செய்ய கற்பிப்பதாகும். சங்கீதம் மாறி மாறி வாசிக்கும்போது அவர்களையும் வாசிக்கும்படி செய்ய வேண்டும். வாசிக்கத் தெரியாத சிறு பிள்ளைகளாக இருந்தாலும் நாம் எழுந்திருக்கும் போதும் ஜெபிக்கும்போதும் அவர்களையும் அதே ஆராதனையை முறையை கடைபிடிக்க பழக்க வேண்டும். அவர்கள் நண்பர்களோடு அமர்ந்து படம் வரைவதோ வண்ணம் தீட்டுவதோ நல்லதல்ல. சிறுவயதிலேயே பிள்ளையின் மனதில் நாம் தேவ சமூகத்தில் இருக்கிறோம் என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டுமாயின் நம் அருகில் அவர்களை அமர வைத்து, நாமும் பயபக்தியோடு ஆராதனையில் பங்கு பெற வேண்டும்.

ஆலயத்தில் பாட இருக்கிற பாடல்களை நம் குடும்ப ஜெபங்களில் முந்தைய வாரம் நம் வீட்டில் பாடினால் நம் பிள்ளைகள் ஆலயத்தில் சேர்ந்து பாடுவதற்கு அது ஏதுவாக இருக்கும். அவர்களும் உற்சாகத்தோடு வழிபாட்டில் ஈடுபடுவார்கள்.


குருவானவரின் பிரசங்கத்தில் அவர்களை குறிப்பெழுத ஊக்கப்படுத்தும் வகையில் அழகான நோட்டு புத்தகங்களை வாங்கிக் கொடுக்கலாம். குருவானவரின் பிரசங்கக் குறிப்புகளை ஆங்கிலத்திலும் திரையில் நாம் காண முடியும். அவைகளை எழுதவும் அதில் வரும் வசனங்களை வேதாகமத்தில் எடுக்கவும், குருவானவர் வாசிக்கும்படி கூறும்போது அவர்களையும் வேகமாக எடுத்து வாசிக்கும்படியும் ஊக்குவிக்கலாம். அப்பொழுது அவர்களின் முழுமையான ஈடுபாடு ஆராதனையில் இருக்கும். கர்த்தரின் வசனம் ஒரு நாளும் வெறுமையாய்த் திரும்பாது (ஏசாயா 55:11).

ஒரு வேளை நம் குழந்தை மூன்று வயதுக்கும் கீழாய் இருந்தால் அக்குழந்தைக்கு புரியும் வகையில் படங்கள் நிறைந்த சிறுவர் வேதாகமத்தை கொண்டுவந்து, ஒத்த வேதபாடங்கள் வரும்போது அதை திறந்து காட்டலாம். நாம் எதை செய்கிறோமா அதையே நம் பிள்ளைகளும் திரும்ப செய்வார்கள். எனவே நாம் வேதாகமத்தை எடுத்து வாசிக்கும் போது அவர்களும் வாசிக்கத் தெரிந்தது போல் வைத்திருப்பார்கள்.


ஆலயத்திற்கு வரும்போது ஒலி மற்றும் ஒளியை உண்டாக்கும் காலணியை நம் குழந்தைகளுக்கு அணிவிப்பதை தவிர்ப்பது நல்லது. ஆலய வாசலிலோ அல்லது நம் இருக்கையினடியிலோ காலணியை கழற்றி வைக்க கற்றுக்கொடுக்க வேண்டும். ஒருவேளை, ஒரு நாட்டின் ராஜாவையோ ராணியையோ சந்திக்க நம் குடும்பத்துக்கு அழைப்பு கொடுக்கப்பட்டால் நாம் எத்தகைய ஆயத்தத்தோடு அவரை சந்திக்க செல்வோம்? அந்த சந்திப்பில் எப்படி இருக்க வேண்டும் என்று நம் பிள்ளைகளுக்கு நிச்சயமாக அறிவுறுத்தி, பின்னரே கூட்டிச் செல்வோம் அல்லவா? அப்படியென்றால் ராஜாதி ராஜாவாகிய நம் இயேசு கிறிஸ்துவை தொழுது கொள்ளும்படி வரும் நாம், எத்தகைய ஜாக்கிரதையுடன், பயபக்தியுடன் வரவேண்டும் என்பதில் நாம் மிகவும் கவனமாய் இருக்க வேண்டும். அத்தகைய ஆயத்தத்துடன் நாம் குடும்பமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆலயத்துக்கு வந்து கர்த்தரை தொழுது கொள்வோம். திருச்சபையின் நாளைய தூண்களாக நம் பிள்ளைகள் வளர, நம்மை நம் திருச்சபையின் இன்றைய தூண்களாக, கிறிஸ்துவின் அஸ்திபாரத்தில் கட்டப்பட்டவர்களாக வாழ கர்த்தர் உதவுவாராக!

வெள்ளிவிழாவை காணும் நம் திருச்சபை இன்னும் அநேக வெள்ளிவிழாக்களைக் கண்டு, இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை, அவர் நாமத்திற்கு சாட்சியாக இந்த ஐக்கிய அரபு அமீரகத்தில் விளங்க திரியேக தேவன் அருள்புரிவாராக!

**திருமதி. ஜெபசீலி ஆசீர்**




குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரை இல்லாத வீடு
- பிஷப் ஜெபராஜ்




- தனிமையில் இருப்பவர்க்கு தாய் அன்பை காட்டிய கருனை இல்லம்.

  - **George kirubaharan Devathomas**
- CSI தமிழ் திருச்சபை என் ஆன்மீக வாழ்க்கையை வலுப்படுத்தி, கிறிஸ்துவின் அன்பில் வளர ஆசீர்வாதமாக இருக்கிறது. - **Salin Robert**
- CSI தமிழ் திருச்சபை மூலம் தேவனோடு என் நடைமுறை உறவு தொடர்ந்து வலுப்பெற்று வருகிறது. – **Sheeba Merlin Robert**
- அமிரகத்தின் ஆசிர்வாதமான CSI தமிழ் திருச்சபையே உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பர்களாக! - **David Paulraj**
- விண்ணப்பத்திற்கு பதிலளிக்கும் கர்த்தரின் பிரசன்னத்தை முழுமையாக உணரும் ஸ்தலம். - **Jebaseeli Asir**
- My only place where I feel someone listens me. – **Sheeba David**
- Perfect harmony & Great blessings for all of us. – **Ranjith**
- Place of blessing that becomes family away from home. – **Alice Jennifer C**
- Spiritual Home. - **Thiyagu Murugaraj**
- Our best oasis of blessings in Abu Dhabi. – **Catherine Radja**
- A place where I found God's purpose for my life. – **Dr.L.Jenila**
- If I could write a single line "Its purely God's Grace" to help us to come across this 25 years in the floating population scenario." – **Manuel Yesudian**
- "My Baby dedication was done here in CSI Tamil Parish,Abudhabi ten years back, where I am growing spiritually now." – **Joha Anit Manuel**
- "I love Junior church, friends and Christmas season." – **Johan Sam Manuel**
- "CSI Tamil Parish, Abudhabi-A great place to worship God, to hear God's word in detail and guiding us in spiritual life." – **Jasmin Manuel**
- "CSI Tamil parish has shaped my values, nurtured my faith, and helped me experience God's presence more deeply in everyday life .– **Shajeetha Gracy**

- CSI Tamil Parish has been my spiritual home, where I've found family, strength, and purpose through every season of life. – **Priya Ranjithkumar**
- Shower of Blessings by God is from Good to Great. - **Manohar Rajapandi.P**
- The true heartfelt conversation with God. – **Titus Agastian**
- The place which answers my anxiety into blessings. - **Vinita Titus**
- A spring in the desert ... **Goldina Thatcher**
- The CSI Tamil Church continues to be a blessing in strengthening my spiritual life and walk with Christ. - **Galvin Robert Salin**
- Through the CSI Tamil Church, my faith is deepened and my relationship with God grows stronger each day. – **Camryn Robert Salin**
- Blessed Beyond Measure! – **Desigta Jaison**
- Rooted in Christ, enriched by faith and fellowship, our CSI Tamil Parish blooms as a family bound by love, prayer, and purpose. - **Arun Jeya Singh**
- 2010 April, first week I came to CSI Tamil Parish Church in Abudhabi. From the day one till date every blessing I received from the Almighty is through CSI Tamil Parish, Abudhabi. - **Samuel Bhaskar W**
- Our church enriches our spiritual knowledge. – **Vanitha Nelson**
- Our Church has been a place of comfort and strength with abounding love. - **Helen Paul**
- Joining the church as a newly married couple, this church blessed us with a beautiful fellowship and countless blessings in our personal lives. - **Nithin Sekhar & Catherine Chris**
- Few born in the UAE can say this: My grandparents worshipped here, my parents were married here, and I grew up here in this exact CSI Tamil Parish AUH , this is home to me. – **Hannah Paul**

- CSI Tamil Parish has been a blessing as it has been a part of our family's story, holding profound significance and countless cherished memories throughout multiple generations that continues to this day. – **Chris Prince**
- This church has been a blessing by providing a spiritual home where I have found encouragement, deepened my faith, and built lasting relationships rooted in God's love. - **Shoba Grapeson**
- CSI Tamil Parish has been a warm sanctuary of faith and affection, we lcoming us as cherished kin and uplifting our soul with each sermon and hymn. We enjoy attending this congregation of love and faith. – **Joe Vivek David**
- The church has been a place of blessings and fellowship, leading to a constructive contribution towards our family. - **Jasmine Sobha**
- The church is a Holy place. - **Jen Scudd**
- CSI Church helped me learn more about God. - **Jim Scott**
- My church has been my family,shaping my faith and guiding my life .- **Geetha kannan**
- CSI Tamil Parish church is a stable presence in my life that helps me grow in spirit, provides regular fellowship away from home, and has given me opportunities to serve God. - **Sunil Manuel Augustine**
- Blessings my family. - **Jacqulin Rani**
- God speaks through song and message, his word comforts me and renew me. - **Jeya Sam**
- CSI Tamil parish has been a great blessing in our family by nurturing our faith and keeping us united us in God's love and fellowship. - **Keren Tessa**
- Blessed in our spiritual lives, good fellowship, children upbringing and parenting. - **Dr Rajakumar Manickam**
- CSI Tamil Parish AUH has been a blessing and part of our lives from the time I moved to the UAE in 2005. - **Crishanth Alexander**
- Shelter for burdended heart. – **Sharmila Rajesh**

## திருச்சபையின் ஸ்தாபக முன்னோடிகள்



திரு. & திருமதி. ஜாண் கிறிஸ்டோபர்



திரு. ரெனால்ட் டேனியல் & குடும்பம்



திரு. & திருமதி வடி விஜயகுமார்



திரு. & திருமதி பொன்ராஜ்



திரு. ஜி.ராஜ்குமார் & குடும்பம்

# பாடகர் குழு







# திருச்சபை பயணத்தின் நினைவலைகள்









பெண்கள் ஐக்கிய சங்கம்





ஆண்கள் ஐக்கிய சங்கம்



நிர்வாகக்குழுவுடன் அமீரகத்தின் குருவானவர்கள்
– 2018 திருச்சபை மற்றும் பாடகர் குழு நாள்





திருச்சபை மற்றும் ஓய்வுநாள் பள்ளியின் சுற்றுலா




## ருவெய்ஸ் திருச்சபை



## மதினா சாயத் திருச்சபை



# ஓய்வு நாள் பாடசாலை (Junior Church)





## விடுமுறை வேதாகமப் பள்ளி நிறைவுநாள்



மருத்துவ மிஷன் சிறப்பு ஆராதனை



ஆசிரியர்கள் சிறப்பு ஆராதனை







# முகாம் ஊழியங்கள்



அல் வாதா ஜெபக்குழு



ஹம்தான் ஜெபக்குழு



முசாபா ஜெபக்குழு



முரூர் ஜெபக்குழு



## டூரிஸ்ட் கிளப் ஜெபக்குழு




## வெள்ளி விழா மலர் வெளியீடு